சூரியப் புதல்வர்கள்

மாவீரர்நாள்

நவம்பர் 27

மாவீரர் நாள்.

விடுதலை வேண்டிக் களமாடி வீழ்ந்த எமது வீரப் புதல்வர்களை நாம் எமது நினைவில் உயிர்ப்பித்துப் பூசிக்கும் நன் நாள்.

தமிழ் இனத்தின் தேசிய வாழ்வு நிலைப்பதற்காகத் தமது சொந்த வாழ்வை ஈகம்செய்த சுதந்திர வீரர்களுக்கு நாம் சிரந்தாழ்த்தி வணக்கம் செலுத்தும் புனித நாள்.

விடுதலைக்காக எமது இயக்கம் கொடுத்த விலை அளப்பரியது. உலகத்தில் எந்த ஒரு விடுதலை இயக்கமும் புரியாத அற்புத சாதனைகளை நாம் ஈட்டினோம். ஒப்பற்ற ஈகங்களைப் புரிந்து தியாகத்தின் சிகரங்களைத் தொட்டோம். இதனால் மானிடத்தின் விடுதலை வரலாற்றில், ஒரு மகத்துவமான இடத்தைத் தேடிக்கொண்டோம். எமது இனத்தின் வீரத்திற்கும் விடுதலை உணர்விற்கும் பெருமை சேர்க்கும் இம் மகோன்னதநிலைக்கு எம்மை இட்டுச் சென்றவர்கள் எமது மாவீரர்களே.

மனித நாகரீகம் தோன்றிய காலந்தொட்டே மனிதர்கள் விடுதலைக்காகப் போராடி வருகிறார்கள். அடக்குமுறைக்கும் அநீதிக்கும் எதிராக, யுகம் யுகமாக விடுதலைப் போராட்டங்கள் நிகழ்ந்து வந்துள்ளன. உலகில் அநீதியும் அடக்குமுறையும் தொடரும்வரை விடுதலைப் போராட்டங்களும் தொடரும். ஒடுக்கப்படும் மானிடத்தின் விடுதலையை நோக்கிய பயணமாகவே மனித வரலாறு நகர்கிறது. ஒடுக்கப்படும் சமுதாயங்களிலிருந்தே வரலாறு படைக்கும் சக்திபெற்ற அபூர்வ மனிதர்கள் பிறக்கிறார்கள். எமது சமூகத்திற் பிறந்த அந்த அபூர்வ மனிதர்கள்தான் எமது மாவீரர்கள்

(2001–ஆம் ஆண்டு தமிழீழ மாவீரர்நாளை முன்னிட்டு தமிழீழத் தேசியத் தலைவர் ஆற்றிய உரையிலிருந்து)

எட்டியுதைக்கும் கால் எடுத்து
கழுவியொரு முத்தமிட்டுக் கிடந்ததெம் முற்றம்
ஆளவருவோரின் தோள்தழுவித்
துவண்டிருந்ததெம் முற்றம்
வேர்கள் தொழப்பார்த்து விழுதுகளும் கையெடுத்துக்
காலைக் கழுவிக் கண்துயின்ற முற்றமிது
பாலை, நெடும்பாலைப் பற்றையெனக்
கிடந்தமுற்றம்
வந்தாரெம் சிறுவ வரிசை
வருகையின் பின்
மந்தாரம் போட்டு மழைபொழியும் முற்றமெனச் செய்தார்
செகத்தையிவர் திகைக்கவைத்து விட்டார்கள்
பொய்யாய்க் கிடந்த புலவைப் புதுநிலமாய் உழுதார்
விழுதெறிந்தார் ஊர்முழுதும் விளைச்சலென
எழுதும் படியாக எப்படியோ செய்துவிட்டார்

ஊரழிப்பேன்
உன்னூரில் உலையேற்ற விடமாட்டேன்
சீரழிப்பேன்
உன்னைத் திசையெங்கும் சிதறவைப்பேன்
தேரெரிப்பேன்
நீவணங்கும் சிவபுரத்தைத் தீயிடுவேன்
பேரழிப்பேன்
தமிழர் நிலமெல்லாம் நானழிப்பேன்
என்றெழுந்தான் எங்கள் எதிரி
அவனையெதிர் கொண்டாரெம் வீரக்குழந்தைகள்
நெருப்பாகி நின்றெதிர்த்து இந்தோ நிலமுறங்கும் மாவீரர்
கல்லறைக்கு என்கண்ணீர்க் காணிக்கை
இக்கவிதைச் சொல்லடுக்கையெல்லாம்
சோடித்தேன் கல்லறையில்.

- புதுவை இரத்தினதுரை

கரும்புலிகள்

கரும்புலிகளாகி இன்று எல்லோர் மனங்களிலும் வாழும் இந்த காலத்தால் சாகாத சிரஞ்சீவிகள் எப்படி கரும்புலிகளானார் கள். சாதாரண மனிதப் பிறவிக்குள் எழுந்த உணர்வின் தீப்பிழம் புகள் கரும்புலிகளாக உருப்பெற்றார்கள்.

இன்று அண்டங்களின் விழிகளை அகலத்திறந்த அந்த மனிதர் களின் உணர்வுகள் என்ன புரியாத புதிர்களா? பூவுக்குள் வாழும் பூகம் பமாக நீருக்குள் நெருப்பாக அவர்களின் உணர்வுகள் பட்டுத் தெரிந்த தன்றோ.

இந்த மனிதர்களைப் பற்றி அறிந்துகொள்ளத் துடிக்கும் ஒவ்வொரு மனிதருக்கும் இங்கே தொடரும் சில நினைவுப் பகிர்வுகள் நெஞ்சின் ஆழ உணர்வுகளை மெல்ல அசைக்கும். ஆனால் பாக்களையும் பாவலர்களை யும் வென்ற இவர்களை இந்த வரிகளுக்குள் வார்த்தைகளாக தந்துவிட முடியுமா என்ன? கரும்புலிகள் தாங்கள் வரித்துக்கொண்ட வடிவத்தினூ டாக எத்தனையெத்தனை சங்கதிகளை தந்துவிட்டுச் சென்றார்கள்.

கரும்புலிகளாக கரும்புலிகள் வாழ்ந்த கணங்களும் அவர்கள் விட் டுச்சென்ற நினைவுகளும் ஆயிரமாயிரம் கதைகளின் கருக்களாக அல்லவா வாழ்கின்றன. இவையென்ன சிறுவிதையின் தளிரா? அல் லது பெரும் விருட்சத்தின் முளையா? எவரால் அறியமுடியும்.

கரும்புலிகளும் கண் கலங்கினார்கள் அவர்களும் பிரார்த்தித்தார் கள். பாசங்கள் சொந்தங்கள் எல்லாவற்றையும் நேசித்தார்கள்.

கரும்புலிகள் யார்? அவர்கள் எங்கே இருக்கிறார்கள். கரும்புலிக ளிற்கும் மக்களிற்குமிடையே உள்ள உறவு எப்படியானது எல்லோ ரும் அறியவேண்டியது. கரும்புலிகள் என்பவர்கள் மக்களோடு உற வாடிக் கொண்டிருக்கும் ஒவ்வொரு போராளி வடிவத்திற்குள்ளேயும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

இதைக் கண்டுபிடிக்கமுடியாது ஆழ்மன உணர்வுகளை அறிகின்ற கருவியொன்று உலகில் கண்டுபிடித்தாலேயொழிய உங்களோடு உங்களுக்குத் தெரியாமலேயே உறவாடிக் கொண்டே இருப்பார்கள்.

இனி கரும்புலிகளின் வாழ்வின் பதிவுகளாக சாவின் நினைவுகளா யிருக்கும் குறிப்புகளுக்குள்ளே போவோம்.

தாய்மையின் ஊற்று

ஒவ்வொரு கரும்புலியும் ஒரு தாயாக தன் போராளிகளை நேசிக்கின்றார்கள். அவர்களுக்குள்ளே அந்த தாயின் ஊற்று சுரந்துகொண்டே இருக்கிறது அப்படித்தான்....

அவள் ஒரு கடற்கரும்புலி. தான் தாக்கியழிக்க வேண்டிய ஒரு இலக்கிற்காக காத்திருந்தாள். அந்தக் கடற்கரும்புலியின் பாதங்கள் சுட்டெரிக்கும் வெயிலால் சூடேறிய மணலின் வெம்மையின் ஊடே பலமுறை அவள் பாதங்கள் சிவக்க நடந்திருக்கிறாள்.

இயக்கத்திற்குள்ளேயும் சில வளப்பற்றாக்குறை நிலவிய காலமது. தன் பாதங்கள் சூடு தாங்காமல் கொதித்த போதும் தன் தோழிகளின் பாதங்கள் கொதிப்பதை தாங்கமுடியாமல் பலமுறை தவியாய்த் தவித்தாள்.

அந்தக் கரும்புலிக்கான தாக்குதல் இலக்கு பொருந்தி வந்ததற்கு முதல் நாள்தான் அவளிற்கான புதிய செருப்பு கிடைத்திருந்தது. இறுதிநாள், அவளிற்கும், அவள் தாக்கப்போகும் எதிரியின் கடற் கலத்திற்கும். எல்லாம் தயாராகி வண்டி புறப்பட்டுவிட்டது.

அலையெறியும் அந்த ஆழ்கடலின் அலைகளையும் மீறி அந்த கடற்கருவேங்கையின் குரல் ஒலித்தது. வண்டியை நிப்பாட்டுங்கோ.... வண்டியை நிப்பாட்டுங்கோ...

என்றவள் தனக்குக் கையசைத்து கண்ணீர் திரையிட கரையில் நின்ற தோழிகளை நோக்கி வண்டியிலிருந்து குதித்து ஓடி வந்தாள்.

தன் தோழியிடம் அந்த புது பாட்டா செருப்பைக் கொடுத்து 'நான் இப்ப போகப்போறன், நான் போனாலும் உனக்கு இந்த பாட்டா தேவைப்படும். நீ பிறகு சுடுமணலுக்குள் சரியாய் கஸ்ரப்படுவாய்' என்றவள் வண்டியேறி தன் இலக்கை நோக்கி போயேவிட்டாள்.



கரும்புலிகளின் கண்ணீர்

ஒரு பெரும் தாக்குதலுக்காக அந்த கரும்புலிகள் அணி எதிரியின் பிரதேசத்திற்குள் சென்றிருந்தது. எதிரியின் பிரதேசத்திற்குள்ளேயே தமது இறுதி உணவை உண்ணத் தொடங்கி விட்டார்கள். தமக்குள்ளே இனிமையாகவும் ஒருவர்க்கொருவர் நகைச்சுவையோடும் பம்பலடித்தபடி அவர்கள் சாப்பிட்டுக்கொண்டிருந்தார்கள்.

ஆனால், அந்தக் கரும்புலிகள் அணிக்கு பொறுப்பாகச் சென்ற கரும்புலிவீரன் மாத்திரம் ஒரு இடத்தில் நிலையாக நிற்காமல் ஏதோவொன்றைப் பற்றி சிந்தித்தபடி இருந்தவனை கூடச்சென்றவர்கள் அணுகினார்கள்.

அந்த வீரனின் கண்கள் கலங்கியிருந்தன. கண்களில் சிறு நீர்த்திரள், போனவர்களிற்கு பெரும் அதிர்ச்சி என்ன கடைசி நேரத்தில் கண்கலங்குகிறான்.

ஒரு போராளி ‘என்ன மச்சான் பிரச்சினை’ அதற்கு அந்தக் கரும்புலி வீரன் ‘இஞ்ச பார் எல்லோரும் சந்தோசமா சாப்பிடுறாங்கள் இன்னும் கொஞ்ச நேரத்தில் வீரச்சாவடையப் போறாங்கள்...’

என்றவன் எங்கோ தொலையை பார்த்தானாம்... தானே ஒரு கரும்புலி. ஆனால், தன் தோழர்கள் வீரச்சாவடையப் போகிறார்கள் என்று அவர்களுக்காக இவன் கண்கலங்கினானாம்.

அம்மா!
உனக்கு உறக்கமே வருவதில்லையா?
எனக்காக ஏன் விழித்திருக்கிறாய்?
நீயோ என்னை மட்டும் நேசிக்கிறாய்!
நானோ என் தேசத்தையும்
மக்களையும் அல்லவா நேசிக்கிறேன்?
என்றும் போல் வாசலில் நின்று
வழியைப் பார்த்து
நீயென் வருகையைத் தேடுவாய்!
என்னைப் போன்று பலர் வீதியில்
போவார்கள் வருவார்கள்!
அவர்களில் என்னைப் பாரம்மா!
இதே போல்
எங்கோ ஒரு தாய்
என்னில் தனது
குழந்தையைக் காணலாம்!

– கரும்புலி
மேஜர் மலர்விழி –

எதிரிதான் எனக்கு எதிரி

கரும்புலி வீரர்கள் தம் இலக்குகள் குறிதவறக் கூடாதென்பதில் மிகக் கவனமாக இருப்பார்கள். தம் இலக்கை நெஞ்சில் வரித்து தமக்குள்ளே தாமே ஒத்திகை பார்ப்பார்கள். தங்களால் ஆகக்கூடுதலாக எவ்வளவு செய்துமுடிக்க முடியுமோ அவ்வளவையும் செய்து முடிக்க துடிப்பார்கள்.

ஒரு சண்டைக்களம் என்றால் அங்கு மிக வேகமாகவும் கடுமையாகவும் போராடுவார்கள். ஆனால், அவர்கள் என்றுமே நிதானமிழந்து போனதில்லை.

தமிழர் குடியிருந்த நிலத்தை எதிரி ஆக்கிரமித்து தனது மக்களை குடியமர்த்தியிருந்த ஒரு பிரதேசத்தில் கரும் புலித் தாக்குதலுக்கான திட்டம். சண்டை தொடங்கிவிட்டது. தாக்குதலின் இறுதியில் அந்தக் கரும்புலி தன்னை அழித்துக்கொள்ள முயன்றபோது எதிரியின் மக்களையும் தாக்கி விடக்கூடிய சந்தர்ப்பம் இருந்தது.

அவன் தன் உடலில் உள்ள வெடிகுண்டை வெடிக்க வைத்தால் அந்த மக்களும் கொல்லப்படலாம் அவன் பதில் சொல்வதற்கும் இருக்க மாட்டான்.

ஆனால், அந்தக் கரும்புலி வீரன் மக்களிருந்த பகுதியைவிட்டு ஒதுங்கி ஒரு வீட்டின் சுவரோடு தன்னை மறைத்து குண்டை வெடிக்கவைத்தானாம்.

எதிரிதான் எனக்கு எதிரியே யொழிய இந்த மக்களல்ல என் பதுபோல அந்த அதிர்வு கேட்டிருக்குமோ என்னவோ.

– மாவீரர் கரும்புலி
மேஜர் அறிவுக்குமரன் –

'தன்னை முற்றாய் அர்ப்பணித்த
தலைவன் வழி சேருவோம்!
தற்கொடைக்கே புகழ்படைத்த
புலிகள் எனச் சீறுவோம்!'
'அலை அலையாய் எழுந்து
எங்கள் விடிவைத் தேடுவோம்!
அதை எடுக்க உயிர்கொடுத்து
வெடிகள் ஆகுவோம்!
கரும்புலிகள் என நடந்து
பகையைச் சாடுவோம்
களத்தில் ஏறி மலரும் ஈழம்
காண வாழுவோம்!'

அலங்காரமான புறப்பாடு

எதிரியின் மிகப்பலமான பிரதேசத்தில் அந்த ஆட்லறித் தளமிருந்தது. கரும்புலிகள் அந்த ஆட்லறி தளத்தினை தாக்கியழிப்பதற்காக நீண்ட நெடுந் தூரம் நடந்தவர்கள்.

ஓய்வுக்காக எதிரியின் பிரதேசத்திற்குள்ளேயிருந்த சிறு கண்டல் பற்றைக்குள் தங்கினார்கள்.

கரும்புலிகளோடு கூடவே சென்றவர்களுக்கு அவர்களைப் பார்க்க வியப்பாக இருந்ததாம். ஏதோ உல்லாசமாக ஓய்வெடுப்பவர்கள் போல அவர்கள் இருந்தார்களாம்.

எதிரியின் சைனியத்திற்குள் இன்னும் சில மணித் துளிகளிற்குள் புயலாக பெரும் எரிமலையாக வெடிக்கப்போகும் இவர்களால் எப்படி உறங்க முடிகிறது என்பதுதான் அவர்களின் வியப்பு.

சென்றவர்களுக்குள் பெரிய மனப் போராட்டம். ஆனால் அமைதியாக கண் விழித்த கரும்புலிகள் எந்த விதமான சஞ்சலமும் இன்றி சிறு துயில் முடித்து எழும்பி தம்மை தயார்ப்படுத்தினார்கள்.

எல்லாவற்றிற்கும் மேலாக அந்தக் கரும்புலிகள் தாங்கள் கொண்டு வந்த கண்ணாடி, சீப்பைக் கொண்டு தலை சீவி தம்மை அழகுபடுத்தியபடி ஏதோவொரு உல்லாச புரிக்குப் புறப்பட்டது போல அந்த ஆட்லறித் தளத்தை தாக்கியழிக்க புறப்பட்டு விட்டார்களாம்.

– சிறி. இந்திரகுமார் –

மீட்புக்கான உங்கள் விலைகள்

எங்கள் வரம்புகளில் எல்லாம்
ஏரிழுக்கும், எருது விரட்டும்,
பாட்டொலிப்புக்கள்
ஏறி நடக்கின்றன.
அலைமேலே ஏறிப் போகும்
அம்பாப் பாடலிலும்
புதிய வேகம்!
புதிய உற்சாகம்!!
பற்றைகளைக் களைந்து விட்டு
வீடுகள் முளைவிடும்
எமக்கான காணிகள்.
இன்னுமின்னும் ஏராளம்
நிகழ்ந்தேறுகின்றன....

எனது புல்லாங்குழலின்
புதியதான பாடலில்
உங்கள் மூச்சுக்களின் சுவாசம்.
உங்கள் குதூகலக் குரல்களில்
பறவைகள் பாடுகின்றன.
அமைதியான உங்கள்
கல்லறைகளில்
உங்கள் கனவுகள்
யாவற்றையும் தோளேற்றி,
தேசத்தின் விடுதலைப் பாடலில்
கரைகின்றேன்,
கால்களை விரைவுபடுத்தியபடி....

யாவும், யாவையும்
இனிமேல்
உங்கள் கனவுகளின்
நனவுப் பூமியில் நிறைவேறும்.
அதுவரையும் உறங்குங்கள்....

இலக்குத் தெரிகிறது
மிகமிக தெளிவாக...
மிகமிக கிட்டத்தில்...

- கை. கவியன்பன்



தமிழீழ விடுதலைக்கு வித்திட்டுச்சென்ற வீரமறவர்கள்

– பொன். தியாகம்

எங்கள் விடுதலைப்போரின் முதல் மாவீரர் லெப். சங்கர் (சுரேஷ்). இவன் சத்தியநாதனாகக் கம்பர்மலை வல்வெட்டித் துறையில் பிறந்தவன். தனது இருபதாவது வயதிலேயே தலைவருடன் இணைந்தவன். ஒரு தாக்குதல் தளபதி. சிறந்த கெரில்லா வீரன். ஆயுதத்துடன் சக போராளிகள் எதிரியிடம் பிடிபடக் கூடாது என்பதில் கவனமாகச் செயற்பட்டவன். நெல்லியடியில் அரசபடை வாகனத்தை நிறுத்திச் சாரதியை இழுத்துச் சுட்டு எதிரிகளை நோக்கிக் குண்டெறிந்து பீதியடையச் செய்தவன்.

சாவகச்சேரிப் பொலிஸ்நிலையத் தாக்குதலில் சீலனுடன் சேர்ந்து, ஒரு பகுதிக்குப் பொறுப்பாக நின்று நடாத்திய தாக்குதலில் எதிரி அரச படைகளைத் திணறடித்தவன். பல போராளிகளைப் பயிற்றி வளர்த்த வன். தலைவரின் அனைத்து வழிகாட்டல்களிலும் ஊறிவளர்ந்தவன்; அளப்பரிய நம்பிக்கை கொண்டவன்.

எதிரிகளை, எதிரிகளின் திட்டங்களை அழிக்க, தகர்க்கவென வலம் வந்த வேளையில் எதிரிகளால் சுற்றிவளைக்கப்பட்டுச் சுடப்படுகிறான். காயப்பட்ட வேளையிலும் மதில் தாண்டிப் பாய்ந்து ஒரு மறைவிடத்தை அடைந்து தன் ஆயுதத்தைச் சக போராளிகளிடத்தில் ஒப்படைத்துவிடு கிறான்.

இந்த நிலையிலே வைத்திய சிகிச்சைக்காகத் தமிழகம் கொண்டு செல்லப்பட்ட சங்கர், சாகும் தறுவாயில் கூட தம்பி தம்பி என்று கூறி எமது தலைவரின் அரவணைப்பிலேயே எமது அமைப்பின் முதல் மாவீரனாகத் தன்னை அர்ப்பணிக்கின்றான்.

'கிட்டு ஒரு தனிமனித சரித்திரம். நீண்ட ஓய்வில்லாத புயலாகவீசும் எமது விடுதலை வரலாற்றில் ஒரு காலத்தின் பதிவு' என்று தேசியத் தலைவர் அவர்கள் கூறினார்.

எமது விடுதலை வரலாற்றில் எண்ணிப் பார்க்க முடியாத பற்பல சாதனைகளைப் படைத்துச் சரித்திரமானவன் இந்தக் கேணல் கிட்டு என்கின்ற சதாசிவம் கிருஷ்ணகுமார்.

எமது வீர சுதந்திர வரலாறு இந்த மாவீரர்களின் இரத்தத்தால் எழுதப் பட்டிருக்கிறது. இவர்களது இழப்புக்கள் அர்த்தமற்ற இழப்புக்களல்ல. இந்த மாவீரர்களின் சாவுகள் எமது சரித்திரத்தையே இயக்கும் உந்துசக்தியாக, எமது போராட்டத்தின் உயிர்மூச் சாக, எமது போராளிகளின் உறுதிக்கு உத்வேகமளிக் கும் ஊக்குசக்தியாக அமைந்துவிட்டன. இந்த மாவீரர்கள் காலத்தால் சாகாத சிரஞ்சீவிகள், சுதந்திரச் சிற்பிகள், எமது மண்ணிலே ஒரு மாபெரும் விடுதலை எழுச்சிக்கு வித்திட்டுச் சென்ற வீரமறவர்கள். எமது இனத்தின் சுதந்திரத்திற்காக, பாதுகாப்பிற்காகத் தமது இன்னு யிரை அர்ப்பணித்துள்ள இந்த மகத்தான தியாகிகள் காலம் காலமாக எமது இதயக்கோவிலில் வைத்துப் பூசிக்கப்படவேண் டியவர்கள்.

நான் உயிருக்கு உயிராக நேசித்த தோழர்கள், என்னுடன் தோளோடு தோள்நின்று போராடிய தளபதிகள், நான் பல்லாண்டு காலமாக வளர்த்தெடுத்த போராளிகள் களத்தில் வீழ்ந்தபோதெல் லாம் எனது இதயம் வெடிக்கும். ஆயினும் சோகத்தால் நான் சோர்ந்துபோவதில்லை. இந்த இழப்புக்கள் எனது இலட்சிய உறுதிக்கு மேலும் மேலும் உரமூட்டியிருக்கின்றன. இந்த மாவீரர்களை நான் கௌரவிக்கிறேன்.

அவர்களுக்குச் சிரம்தாழ்த்தி வணக்கம் செலுத்துகிறேன். அவர்களது தியாகத்தையும், வீரத்தையும், விடுதலைப் பற்றை யும் எண்ணிப் பார்க்கும்போது, எனது உள்ளம் பெருமைகொள் கிறது'

–எமது தேசியத் தலைவர் அவர்கள்

யாழ்ப்பாண நகர வீதிகளிலே வலம் வந்து தமிழ் மக்களுக்குக் கொடுமைகள் பலபுரிந்த சிறீலங்கா இராணுவத்தினரை, சிறுதொகைப் போராளிகளை வைத்துக் கொண்டு முற்றுகையிட்டுத்தாக்கிக் கிலியடையச் செய்து, முகாமுக்குள் அவர்களை முடக்கி வைத்துக் காவல்காத்து யாழ்த் தளபதியாகத் திகழ்ந்தவன் கிட்டு.

எதிரிகளை எதிர்த்துப் போராட்டம் நடாத்திய சமகாலத்திலேயே எமது விடுதலையின் நீதியான நியாயமான செய்திகளை எழுத்துருவில் வடித்து அகில உலகமும் அறியச்செய்யும் ஒரு எழுத்தாளனாகத் திகழ்ந்தான். இவன் தனி மனிதனுமல்லன், தனியப் போராளியுமல்லன். இவன் ஒரு அரசியல் விற்பன்னன். சிறந்த பேச்சாளன், புகைப்படக்கலைஞன், நீதியாளன், பொருளாதார மேதை. இவனால் ஆரம்பிக்கப்பட்ட நிதர்சனம், புகைப்படக் கலை, பொருண்மியம், இணக்க சபைகள் யாவும் இன்று விருட்சமாக வளர்ச்சிகண்டு போராட்ட சமகாலத்தில் ஈழமக்களைப் பயன்பெறச் செய்கின்றன.

போராட்டத்தை நடாத்திக்கொண்டே போராட்டத்திற்கு அணிதிரட்டுவதிலும் கண்ணும் கருத்துமாகச் செயற்பட்டு வந்தான். இந்த வேளைகளிலேதான் தேசவிரோதக் கும்பல்களாக வலம்வந்த புல்லுருவிகளையும் சமாளிக்க வேண்டியநிலை கிட்டுவுக்கு ஏற்பட்டது.

1986-ஆம் ஆண்டு எமது தலைவர் அவர்கள் தமிழ்நாட்டில், இந்திய அரசாங்கத்திற்கு எதிராக ஆரம்பித்த, சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தைத் தமிழீழ மக்கள் அறியும் வண்ணம் பெருந்திரளான மக்களைக் கூட்டி உலகம் வியக்கும் வண்ணம் மாபெரும் ஊர்வலம் நடாத்திப் பொதுக்கூட்டத்தையும் கூட்டி விளக்கவுரை நிகழ்த்தினான்.

1987-இல் தேசவிரோதிகள் மறைந்திருந்து தாக்கியதில் இடது காலை இழந்த

கிட்டு அதனால் துவண்டு ஓய்ந்துவிடவில்லை. மக்கள் துன்பத்தில் மூழ்கித் தவித்தவேளை அதே ஆண்டு நல்லூரில் நடந்த மேதினத்தில் கலந்து உரையாற்றியதன் மூலம் மக்கள் மனங்களில் மறக்க முடியாத ஒரு பதிவைப் பெற்றுக்கொண்டான்.

மக்கள் மத்தியில் எமது போராட்ட உணர்வை வளர்க்கப் பட்டிதொட்டி எங்கும் கருத்தரங்குகள் வில்லுப்பாட்டுத் தெருக்கூத்துக்களை நடாத்தி மக்களை அணிதிரட்டுவதில் பாடுபட்டு வந்தான் கிட்டு. இங்கு இந்தியப்படை உலாவந்து, மக்களை அழித்து அட்டூழியங்கள் புரிந்த காலம் இந்தியா சென்று உண்மைகளை விளக்கி உரையாற்றி எழுதிவந்த காலத்தில் இந்தியச் சிறையில் வாடும் நிலையும் ஏற்பட்டது.

பின்பு 1989-ஆம் ஆண்டளவில் எமது அமைப்பின் வெளிநாட்டுப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டான். சர்வதேசங்களிலும் கிட்டு செய்த பிரச்சாரங்களும், பணிக

ளும் எமது போராட்டத்தின் யதார்த்தத்தை அகில உலகமும் அறியச்செய்ததுடன், எமது போராட்டமும் வளர்ச்சியும் உத்வேகமும் அடைந்தது.

இக்காலகட்டத்திலேதான் சர்வதேச நாடுகளில் சமாதான ஆலோசனைகள் சில பெற்றுத் தலைவரைக் காணும் முனைப்புடன் தனது சக தோழர்களுடன் கப்பலேறி வங்கக்கடல் மூலம் பயணித்தவேளை இந்தியக் கடற்படையால் கப்பல் மறிக்கப்பட்டு கிட்டுவையும், தோழர்களையம் உயிருடன் பிடிக்க முற்பட்ட வேளை 16.01.1993 ஆம் திகதி உயிருடன் வஞ்சகரிடம் பிடிபடக் கூடாது என்ற எமது இயக்க மரபை ஏற்றுத் தானும் தன் தோழர்களும் எரியூட்டித் தாம் வந்த கப்பலையும் தகர்த்துக் காவியமானார்கள்.

லெப். கேணல் தியாக தீபம் திலீபன், எமது இயக்கம் ஆயுதம் ஏந்திப் போராடும் ஓர் இராணுவக் கட்டமைப்பு மட்டுமன்று எமது போராட்டம் பல கோணமாய்க் கோலமாய் அமைந்தது என்று உலகுக்குக் காட்டியவன். இந்தியப்படை தமிழீழத்தை முற்றுகையிட்டு வலம் வந்தவேளை இவன் வேள்வி நிகழ்ந்தது.

இவன் ஒரு மருத்துவ மாணவன். மக்களை நேசித்தான். தலைவரின் தீர்க்கதரிசனச் சிந்தனைகளை உயிர் இலட்சியமாக வரித்துக்கொண்டான். போராட்டத்தில் இணைந்தான். பல இடங்களில் எதிரிகளை எதிர்த்துப் போராடினான். சுதந்திரப் பறவையணியை ஆரம்பித்து மகளிர் அணி அமைய வித்திட்டவனும் இவனே. சிறந்த ஓர் அரசியல் பேச்சாளி. இந்திய அரச

மாவீரர்கள்

ஆக்கம்: பாரதி (போராளி)

ஓ! இலட்சிய வேங்கைகளே,
நீங்கள் காலத்தால் அழியாத காவியங்கள்.
மண்ணின் மைந்தர்களாய்,
மக்களின் மனதில் மன்னர்களாய்
கொலுவீற்றிருக்கும் எம் தேசத்தின்
தெய்வங்கள்.
சின்ன வயதில், சிரிக்கின்ற பருவமதில்,
சிந்தித்து முடிவெடுத்து,
இளமைக்கனவுகளை மண்ணிற்காக புதைத்து விட்டு,
அண்ணன் வழியில் இணைந்தீர்கள்.
கடின பயிற்சிகள் பல முடித்து
களங்கள் பல கண்டு மாவீரராய்
உங்கள் வாழ்வை முடித்துக் கொண்டீர்கள்.
எம் மனதில் உயர்ந்து நிற்கும் மாவீரர்களே!
விழி மூடித்துயிலும் உங்களின் கனவுடன்
விரைந்து நடக்கின்றோம்.
வேங்கைகள் வீழ்வதில்லை, விதையாகுகிறார்கள்
இந்த மண்ணின் புதல்வர்களாய்,
நீங்கள் மரணித்த வேளையில்
தமிழ்த்தாய் உங்களின் ஒப்பற்ற தியாகத்தால்
உள்ளம் பூரிப்படைந்திருப்பாள்.
நீங்கள் களங்களில் சாதனைகள் பல செய்த போது,
தமிழ்த்தாய் உங்களை மனமார ஆசீர்வதித்திருப்பாள்,
நீங்கள் மண்ணிலே வித்தாக வீழும்போது,
கோடி கனவுகள் நெஞ்சில் சுமந்திருப்பீர்கள்.
அவை அனைத்தும் வீண்போகாது
இது உறுதி.
நீங்கள் ,
எளிமையின் இருப்பிடங்கள்
கவலையின்றி கல்லறையில் துயிலுங்கள்.
உங்கள் கனவு நனவாகும் காலம்
வெகுதூரமில்லை.
கவி எழுத வரியில்லை – ஏனெனில்
உங்கள் இலட்சியம்...
வரிகளில் அடக்கபட முடியாதவை.
உங்கள் பாதச் சுவட்டை அடியொற்றி,
உங்கள் கனவை நெஞ்சில் சுமந்து,
தலைவன் வழியில் விரைந்து நடக்கின்றோம்....
விரைவில் சுதந்திரம் படைப்போம்.

படையை முடக்கி மறியற்போராட்டம் நடாத்தி இவன் ஆற்றிய உரை இன்றும் மக்கள் மனங்களில் மறக்கமுடியாமல் ஆழப்பதிந்துள்ளது.

இந்தியப்படையின் அட்டுழியங்களை உலகம் அறியச்செய்ய 15.09.1987-ஆம் திகதி நல்லூர்க் கந்தன் வீதியிலே ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து நீர் கூட அருந்தாது, திலீபன் உண்ணாவிரதமிருந்தான். இலங்கை, இந்தியா ஆகிய இரு அரசுகளும் தியாகி திலீபனின் அகிம்சையைக் கொச்சைப்படுத்தினவே தவிர நியாயம் கேட்கவும் இல்லை. நீதி வழங்கவும் இல்லை. 12 நாட்களில் நாம் திலீபனை இழந்தோம். இந்திய அகிம்சை முகத்திரை அகில உலகிலும், திலீபனால் கிழித்துக் காட்டப்பட்டது. எமது அமைப்பின் போராட்டம் நீதியானது என்பதைச் சர்வதேசமும் அறிந்துகொண்டது.

தான் நேசித்த மக்களுக்காக, தான் நேசித்த மண்ணுக்காக ஒருவன் எத்தகைய உயர்ந்த, உன்னத தியாகத்தைச் செய்ய முடியுமோ அந்த அற்புதமான அர்ப்பணிப்பைத்தான் அவன் செய்திருக்கிறான்' என்று எமது தலைவர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

லெப். கேணல் குமரப்பா, லெப்.கேணல் புலேந்திரன் உட்படப் பன்னிருவர் சயனைட் அருந்தி வீரச்சாவு. இது இலங்கை இந்திய கூட்டுச் சதியால் நிகழ்ந்தது. ஒப்பந்த அடிப்படையில் நியாயமான நிலையில் இங்கிருந்து இந்தியா நோக்கிக் கடலில் பயணித்த வேளையில் இந்தியப்படை செய்த ஒப்பந்தத்தை மீறிக் கைதுசெய்து இலங்கை அரசிடம் ஒப்படைக்க முயன்ற வேளை இது நிகழ்ந்தது. மூத்த தளபதிக

தாய்

பூபதித்தாய்! நீயெங்கள் ஈழத்தாய்
பெரு வீரத்தாய் ஒரு தீரத்தாய்
வெற்றி ஆரத்தாய் நீ சாதித்தாய்

மண்ணை நேசித்தாய் கண்ணாய் பூசித்தாய்
நீதி யாசித்தாய் நீ நீதித்தாய்
அகிம்சை போதித்தாய் உலகை பாதித்தாய்

நீர் மட்டும் குடித்தாய் நீதிக்காய் துடித்தாய்
உண்ண நீ மறுத்தாய் உருகியே கிடந்தாய்
ஒளியாய் தெரிந்தாய் தெளிவாய் இருந்தாய்

அகிம்சை நீ தொடுத்தாய் அதற்காய் மடிந்தாய்
விடுதலை தேடி அலைந்தாய் விம்மிட வைத்து
விழுந்தாய்

பாரதர் கதையை முடித்தாய் அவர் முகத்திரையை கிழித்தாய்

பூவாய் இருந்தாய் புயலாய் புகுந்தாய்
பாவாயின்று வந்தாய் பாரைவியக்க வைத்தாய்
பெயரையுலகில் பொறித்தாய் போனாய் நேற்று வித்தாய்

ஈழத்தமிழர் சொத்தாய் இருப்பாயெம்மில் முத்தாய்
இந்தியப்படையை கண்டித்தாய் இறுதியில் அவரை நீ தண்டித்தாய்
அகிம்சை செய்த முதல் தாய் நீ அழியாவீரப் பெருந்தாய்

மட்டுவில் பிறந்தாய் மலரென மலர்ந்தாய்
மண்மடியினில் மறைந்தாய் ஒளியெனப்புலர்ந்தாய்
உலகினில் உயர்ந்தாய் பெண்ணினுள் சிறந்தாய்

பூபதித்தாய்! நீயெம் அறத்தாய்
வீர மறத்தாய் உயர் தமிழ்த்தாய்
தீயில் குளித்தாய் தீரம் படைத்தாய்.

- சுபாதி -

ளையும், ஏனைய வேங்கைகளையும் இழந்து தமிழீழ மக்கள் தவித்தனர். தீருவிலில் இவர்களைத் தீயுடன் சங்கமமாக்கித் தூபியும் எழுப்பினர்.

'கப்டன் மில்லருடன் கரும்புலிகள் சகாப்தம் ஆரம்பமாகியது. என்றுமே உலகம் கண்டிராத, எண்ணிப்பார்க்கவும் முடியாத, தியாகப்படையணி ஒன்று தமிழீழத்தில் உதயமாகியது' எமது தேசியத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

எங்கள் படையணி மிகச் சிறிது. எதிரிப் படையணி அளவிட முடியாதது. இந்த நிலையிலேயே எமது தலைவர் அவர்கள் சிந்தனையில் உருவான உயிராயுதம்தான் இந்தக் கரும்புலி.

இதற்கு முதன்முதலாக வித்திட்டவன் கரும்புலி கப்டன் மில்லர். லிபறேசன் ஒப்பறேசன் என்ற பெயருடன் பெருமெடுப்பிலாக நெல்லியடி முகாமிலிருந்து முன்னேற முயன்ற இராணுவத்தை எதிர்நின்று போராடித் தடுக்கமுடியாது என்ற நிலையில் வாகனத்தில் வெடிமருந்தை நிரப்பி, அதை ஓட்டிச்சென்று நெல்லியடி முகாமைத் தகர்த்து எதிரியை அழித்துக் கிலியடையச்செய்து, திட்டத்தை முடக்கி இலங்கை அரசைத் தோல்வியடையச் செய்து, உலகை வியப்பிலாழ்த்தித் தன்னை உருக்குலைத்த மில்லர் எமது முதல் கரும்புலி என்னும் வரலாற்றுப் பேற்றைப் பெற்றான்.

இந்த நிலையிலே மகளிரும் சளைத்தவர்கள் அல்லர் என்பதை கடற்கரும்புலி கப்டன் அங்கயற்கண்ணி நிரூபிக்கிறாள். முதல் பெண் கரும்புலி என்ற நிலையில் கப்பலைத் தகர்த்துக் கடலிலே காவியமாகினாள்.

காந்தரூபன், வினோத், கொலின்ஸ் என்ற மூன்று கடற்கரும்புலிகளும் கப்பலைத் தகர்த்துக் கடலில் சங்கமமாகிக் கடற் கரும்புலிகளிலே முதலிடத்தைப் பெற்றுத் தங்களை வரலாறாக ஈழத்தில் பதிவாக்கியுள்ளனர். தரைப்பெண் முதற் கரும்புலியாக மேஜர் யாழினி முகாம் தகர்ப்பில் தன்னைச் சிதறடித்துக் காவியமானாள்.

எமது தலைவர் அவர்களின் உயரிய திட்டமிடலிலே உருவாகிய மகளிர் படையணி முதலாவது பயிற்சிப் பாசறையில் பயின்றாள் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த பேதுரு சகாயசீலி. இவள் மாலதி என்னும் பெயருடன் படையிறங்கினாள். இந்தியப் படை தமிழீழத்தை வலம்வந்த நேரத்தில் கோப்பாய் வெளியில் அப்படையுடன் நேரடி மோதலில் வீரச்சாவடைந்து முதல் பெண் மாவீரராகிய பெரும் பேற்றைப் பெற்றுக்கொண்டாள்.

தியாக வேள்வி போராளி திலீபனுடன் நின்று விடவில்லை. மட்டுநகரிலே அன்னைபூபதி. இவள் குடும்பம் பெரிது. மிக வறுமை. இவளது பிள்ளைகள் அரக்கர் படையால் கொல்லப்பட்டும், வதைக்கப்பட்டும் அடைக்கப்பட்டும் வேதனையடைந்த நிலையிலே தமிழீழத்தை, தமிழ் மக்கள் நிலையை உணர்கிறாள். இந்தியப் படைகள் அட்டூழியம் புரிந்தகாலம் அன்னையர் முன்னணியுடன் இணைந்து நீதி கேட்டுச் செயற்படுகிறாள். இந்தியப்படையிடம் நீதி கேட்டு உண்ணாவிரதமிருப்பதாகத் திட்டமிடப்படுகிறது. ஒரு பெண் தெரிவுசெய்யப்பட்டு உண்ணாவிரதமிருந்து எதிரிகளால் குழப்பப்படுகிறாள். இது கண்டு கொதித்தெழுந்த அன்னை பூபதியம்மா துணிந்து உண்ணாவிரதத்தைத் தொடங்குகிறாள். இரு அரசுகளும் குழப்ப முற்பட்டன. பயமுறுத்தின. எதற்கும் சளைக்காத தியாகி பூபதியம்மா 31 நாட்கள் தொடர்ந்திருந்து ஈகச்சாவடைகிறாள். இவள் மகளிருக்குள் மாணிக்கம், நாட்டுப்

பற்றாளர். இவளது தினம்தான் நாட்டுப்பற்றாளர் தினமாகவும் பிரகடனமாகியது.

'எமது இனத்தின் சுதந்திரத்திற்காகவும், பாதுகாப்புக்காகவும், தமது இன்னுயிரை அர்ப்பணித்துள்ள இந்த மகத்தான தியாகிகள் காலங்காலமாக எமது இதயக் கோவிலில் பூசிக்கப்பட வேண்டியவர்கள்' என எமது தேசியத் தலைவர் அவர்கள் 1990 மாவீரர் நாள் உரையில் குறிப்பிட்டிருந்தார்.

தேசியத் தலைவர் அவர்கள் 27.11.1982-இல் முதல் மாவீரர் லெப். சங்கர் வீரச்சாவடைந்த நாளை 1989-ஆம் ஆண்டு தொடக்கம் மாவீரர் நாளாகப் பிரகடனப்படுத்தினார். அது மாவீரர் வாரமாகத் தொடங்கி, மாவீரர் பெற்றோர்கள் அழைத்துக் கௌரவிக்கப்பட்டு, துயிலுமில்லங்களுக்கு அழைக்கப்பட்டு மாவீரர் கல்லறைகட்குச் சுடரேற்றப்படுகிறது. இது தமிழீழமெங்கும் விசேட எழுச்சி நாளாகும்.

கடற்கரும்புலி மேஜர் காந்தரூபன் பெற்றோரை இழந்து, தலைவரால் வளர்க்கப்பட்டான். தன்னைப் போல் தமிழீழத்தில் பிள்ளைகள் அனாதைகளாகக்கூடாது என்று கேட்டுக்கொண்டதன்படி காந்தரூபன் அறிவுச்சோலை, செஞ்சோலை என்பன எமது தலைவர் அவர்களால் ஆரம்பிக்கப்பட்டு முன்னேற்றப் பாதையில் வழிநடத்தப்பட்டு வருகின்றன. ஊனமுற்ற போராளிகள் மனங்குன்றிப் பேதலித்துத் தாழ்வுச் சிக்கலடையாவண்ணம், கையை இழந்தும் மனங்குன்றாது தொடர்ந்து போராடி மாவீரராகிய லெப். கேணல் நவம் பெயரால் நவம் அறிவுக்கூடம் ஆரம்பிக்கப்பட்டுச் சிறப்புற நடந்துவருகிறது.

இவ்வாறாக கேணல் கிட்டுவும், தோழர்களும் காவியமான தினம், கரும்புலிகள் நாள், பன்னிருவர் தினம், மாலதி நாள், தியாகி திலீபன் தினம், அன்னை பூபதியம்மா நாட்டுப்பற்றாளர் தினம், மாவீரர் நாள் ஆகியன எமது தமிழீழத்தின் தேசிய தினங்களாக எமது தலைவர் அவர்களால் பிரகடனப்படுத்தப்பட்டுத் தமிழீழ மக்களால் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றன.

இந்நிகழ்வுகளைத் தமிழீழ மக்கள் நினைவுகூர்வதன் பலனாக, மாவீரர்களுடைய தற்கொடைத் தியாக அர்ப்பணிப்புக்களை, தங்கள் துயரமான இடப்பெயர்வு வாழ்வுகளை எதிரி அரசினுடைய மருந்துத் தடை, உணவுத்தடை, அட்டூழியங்கள், அரக்கர்படை புரியும் அக்கிரமங்களை அறிந்து உணர்ந்து கொள்ளும் சந்தர்ப்பம் ஏற்பட்டு, அமைப்புடன் இணைந்து போராட்டத்துக்கு முழு ஒத்துழைப்பு நல்கி வருவதால், போராட்டம் வீறும் விறுவிறுப்பும், விரைவும் அடைந்து வருவதாலும் தமிழீழம் விடிவடையும் நாள் நெருங்கி வருவதாலும் யாவரும் மகிழ்ச்சியடைந்து மாவீரருக்கு நன்றித்துதி பாடிப் போற்றுகிறார்கள்.

✡✡✡

'எமக்கு எமது நாடு வேண்டும். எமது மக்களுக்கு விடுதலை வேண்டும். எமது இனம் சுதந்திரமாக வாழவேண்டும் என்ற ஆக்ரோசமான இலட்சிய வேட்கையுடனேயே மாவீரர்கள் களத்தில் விழுகிறார்கள். எனவே எமது மாவீரர்கள் ஒவ்வொருவரது சாவும் எமது நாட்டின் விடுதலையை முரசறையும் வீர சுதந்திரப்பிரகடனமாகவே சம்பவிக்கின்றது'

– எமது தேசியத் தலைவர் அவர்கள்

ஊர்புகுவோம் மிகவிரைவாய்!

பூச்சொரிந்த முற்றத்தில் போயிருந்து
ஆ. சிரித்து மகிழ்வதெக் காலம்?
பச்சை வயல் வரம்பேறி எங்கள்
பாதம் பதித்து நடப்பதெக்காலம்?
பிச்செறிந்து புறப்பட்டு நல்லைப்
பதிவணங்கி, நலம் கேட்டு, ஊர் பலவும்
அச்சமின்றி சுற்றி வருவதெக்கலாம்?
புற்றரையில் நின்று புன்னகைப்பதெக் காலம்?

முனியப்பர் கோயில் முன்றலில், ஆறு
மணிவரைக்கும் நின்று கதைப்போம்.
பின்னெழுந்து புறப்பட்டு பால் நிலவின்
முன்னிருந்து அவ்வழகை ரசிப்போம்.
எங்கேனும் பட்டிமன்றம், கூத்து
எடுப்பான விழாவென்றால் அங்கிருப்போம்.
சாந்தன், சுகுமார் பாட்டுக் கச்சேரி
கேட்கப் போய் வேளைக்கே காத்திருப்போம்.
அப்பிப் படிந்த இருளூடே துணையின்றி,
ஆறு மைல்களுக்கப்பால் சென்று வருவோம்.
குப்பிழானில் இருந்து குருநகர் வரும் வரைக்கும்
குறுக்கே மறித்தொருவர் ஏனென்று கேளார்.
உப்பளத் தெருவெல்லாம் திரிவோம்.
ஊர் ஒழுங்கை உள்வீதி வழியெங்கும்
தப்பாதெங்கள் மிதிவண்டி திரியும்.
தடுப்பாரின்றி எம்பயணம் தொடரும்.

பல்கலைக் கழக விரிவுரைகள்
படித்துவிட்டுப் பின்னேரம் பூசைக்காய்,
தெல்லிப்பளை சென்று தரிசித்து,
வல்லிருள் சூழமுன் வீடடைவோம்
சொல்லிமாளாத சுகம் காண்போம்.
சொர்க்கமென எண்ணிமகிழ்வுறுவோம்
தள்ளியிரென்று சொல்வாரற்று: நாம்

தாய் மண்ணைப் பலகாலம் ஆண்டுவந்தோம்
சத்தமின்றிப் பூத்திருந்த தாய்மண் மீது
சாத்தான் படைகளின் ஆய்க்கினைகள் பலநூறு...
நித்திரைக்குப் போகையிலும் நிம்மதியற்று
நித்தமும் விழித்திருக்க வேண்டியாச்சு.
இத்தரை எமதென்று எழுந்து நடக்க
அருகதையற்று ஊரடங்க வேண்டியாச்சு.
புத்தரை வணங்கும் பித்தர் படையாலே
செத்தவர் போல் தேசம் சிதைவுற வேண்டியாச்சு.

ஆறு மணியென்றவுடன் ஊரடங்கும்.
மீறுவோர்கள் யாரெனினும் மூச்சடங்கும்,
வீரிட்டு சிறுகுழந்தை அழுதாலோ...
வழிதெருவில் விளக்கொளி தெரிந்தாலோ...
ஏறிட்டு நோக்கி எத்தர் படைவந்து,
மிரட்டும்! உரக்கக் கதைத்தால் உயிர் போகும்.
ஆரிட்டைச் சொல்லி ஆறுவதென்று அறியாமல்
நேரிட்ட துயரை உறவுகள் நெஞ்சுக்குள் பொத்தும்.

எடுபிடிகள் வந்துநின்று எதிரியுடன்
அடிவருடித் திரிகின்றார்; மக்களுக்கோ
கெடுபிடிகள்; அது வெறு வில்லங்கம்
கூடித்திரிந்து குழிபறிப்பார்; புலிகள் பலத்திற்கு
ஈடுகொடுக்க முடியாதார், துயரிழைப்பார்.
ஓடுகாலிகளாய் ஓடியோடி நக்கிப் பிழைக்கும்
ஒப்பற்ற துரோகிகளாய் இவரிருப்பார்.

தாய்மடியில் படர்ந்த இருள் விலக வேண்டும்.
தயக்கமின்றி நாங்கள் நடைபயில வேண்டும்
வாய்மூடி வாழ்ந்த காலம் விலக வேண்டும்.
வசந்தம் வந்து வாசல் நின்று சிரிக்க வேண்டும்.

போய்முடிந்தார் பகைவரென்று பாடவேண்டும்.
போற்றியெங்கள் தலைவனென்று வாழ்த்த வேண்டும்.
பாய்விரித்து யாழ் மண்ணில் துயில வேண்டும்.
புலிகளுடன் கூடிவிருந்து உண்ணவேண்டும்.

பள்ளிக் குயில் கிருசாந்தியைத் தொட்டவனை,
மலக்குழியில் ராஜினியைப் புதைத்தவனை,
சொல்லிலடங்காத் துயரை மண்ணில் விதைத்தவனை,
சொர்க்கமான எம் வாழ்வைக் குலைத்தவனை.
கொள்ளியிட்டு தாய்நிலத்தை எரித்தவனை,
கொலைவெறி கொண்டு தங்கை உயிர் பறித்தவனை,
எள்ளிநகைத் தேளனங்கள் செய்தவனை,
இனியும் விடோம், விடுதலைக்காய் நாமெழுவோம்.

தடையேதும் இருந்தெம்மைத் தடுத்தலாகா,
தமிழனென்று அடித்தெவரும் மிரட்டலாகா,
பிடித்தெவரும் விசாரணைகள் செய்தலாகா,
அடிபணிந்து எவர்முன்னும் வாழலாகா,
அடைபட்டு எதிரிக்கஞ்சி இருத்தலாகா,
அன்னை பூமிக்காரும் விலங்கு போடலாகா,
படைதிரண்டு வந்தெம்மை அழித்தலாகா,
பயந்திங்கே தமிழர் நாம் ஒழித்தலாகா.

சொந்த மண்ணில் அச்சமின்றி வாழ்தலின்பம்
தொந்தரவு ஏதுமின்றி இருத்தலின்பம்.
வந்தபடை போய்விழவே ஊர்புகுவோம்,
எங்கள் நிலம் மீண்டதென்று நாம் வருவோம்.
அந்த நாள் வரும்வரைக்கம் போரிடுவோம்.
அண்ணன் படை வெல்லுமென்று கூறிடுவோம்.
சொந்தங்களே எங்களுக்காய் காத்திருங்கள்.
சேர்ந்து நாங்கள் வாழ்வோம் நாளை மகிழ்ந்திருங்கள்...

- வேலணையூர் சுரேஷ்

கிட்டு பீரங்கிப்படையணியின் சிறப்புத் தளபதி கேணல் ராஜு குயிலன் நினைவுச் செய்தி

விடுதலைப் போரில் சுமைகளைச் சுமந்ததொரு போரியல் ஆற்றலாளனை நாங்கள் இழந்து போனோம். எங்கள் தலைவனின் இராணுவ நுட்பங்களுக்கு செயல் வடிவம் கொடுத்ததொரு மூத்த தளபதி கேணல் ராஜு 25.8.2002 அன்று சுகயீனம் காரணமாக வித்தாகிப்போனார்.

மனித வாழ்வில் ஒவ்வொருவருடைய வாழ்வனுபவமும் தனித்துவமானது. இவ்வாழ்வனுபவ நிலையில் எல்லா மனிதர்களும் தனித்துவமானவர்கள். ஆனால் இத்தனித்துவத்தை மனித இருப்பு நிலையின் ஆழத்துக்குச்சென்று அதனைத் தரிசித்து அதை வெளிக்கொணர்பவர்கள் ஒருசிலரே. எமது விடுதலைப்போராட்டப் பாதையில் எத்தனையோ எமது போராளிகள் தன்னலமற்ற ஆழமான தேசப்பற்றும் விடுதலை வேட்கையும் கொண்ட தனித்துவ மனிதர்களாக வாழ்ந்துள்ளனர். மானிட வாழ்வின் மெய்மையை தரிசித்த உன்னதமான தனித்துவமான இயல்புகளைக் கொண்டவர்களாகவும் ஆளுமை வீச்சுக்கொண்டவர்களாகவும் வாழ்ந்து தம்மை தேசவிடிவிற்காக அர்ப்பணித்துள்ளனர். இவ்வரிசையில் கேணல் ராஜு அவர்களின் வாழ்வு எமது விடுதலைப் போராட்ட வரலாற்றில் ஓர் ஆழமான வரலாற்றுத்தடத்தை பதித்து நிற்கின்றது.

எமது இனம் பெரும் அடக்குமுறைக்குள்ளான 1983 காலப்பகுதியில் கேணல் ராஜு அவர்கள் தன்னை இவ் விடுதலைப்போரில் இணைத்துக்கொண்டார். அர்ப்பணிப்பும் ஆழமான விடுதலை வேட்கையும் கொண்ட கேணல் ராஜு அவர்கள் போராட்டம் பெரும் நெருக்கடிகளைச் சந்தித்த காலங்களிலெல்லாம் எமது தலைவருடன் உடனிருந்து தலைவரின் போரியல் நுட்பங்களுக்கு செயல்வடிவம் கொடுத்தவர்.

விடுதலைப்போரின் படையியல் வளர்ச்சியின் அம்சமாக மரபுரீதியான போர்ப் படையணிகள்



உருவாக்கம் பெற்ற போது தலைவர் அவர்களின் நெறிப்படுத்தலில் எமது இயக்கத்தின் முதலாவது சிறப்பு கொமாண்டோப் படையணியை உருவாக்கியவர்.

கேணல் ராஜு எமது இயக்கத்தின் இராணுவ அறிவியல் ரீதியான வளர்ச்சிக்காக தன்னை முழுமையாக அர்ப்பணித்து உழைத்தவர். இயல்பாகவே இலத்திரனியல் பொறியியல் துறைகளில் திறமையும் ஆர்வமும் கொண்டவர். விடுதலைப்புலிகளின் பொறியியல் பிரிவின் பொறுப்பாளராகக் கடமையாற்றி படையியல் ரீதியான பல புதிய உருவாக்கங்களின் உந்து சக்தியாகத் திகழ்ந்தவர்.

மூன்றாம் கட்ட ஈழப்போரின் பின்னர் மாற்றமடைந்த போரியல் நுட்பங்களை ஈடு செய்து புலிகள் மரபுப்படையாக எழுந்த போது, விடுதலைப்போரின் முதலாவது கனரக ஆட்டிலறி பீரங்கிப்படையின் உருவாக்கத்தையும், வெற்றிகரமாகத் தொடர்ந்த அதன் செயற்திறனையும் சாத்தியமாக்கிய போரியல் ஆற்றலாளன். போர்க்களங்களில் வெளிப்பட்ட அவரது ஆளுமை வீச்சு, ஆட்டிலறிப் படைக்கலங்களின் துல்லியமான இயக்கம், ஒருங்கிணைப்பு போன்றவற்றில் இவர் வெளிப்படுத்திய அசாத்திய திறமை நெருக்கடியான பல களங்களில் எமக்கு பல வெற்றிகளைப் பெற்றுத்தந்தன.

மனித இனத்தின் கொடிய எதிரியான புற்றுநோய் தனது வேர்களை இவருள் பரப்பிய நேரத்திலும் சோர்வின்றி உடல் தளராது எமதியக்கத்தின் இராணுவ அறிவியற்துறையின் வளர்ச்சிக்காக தன்னை வருத்தி உழைத்துக்கொண்டிருந்தார். இறுதி வரை எமதினத்தின் விடிவையும் தேசத்தையுமே சிந்தித்தார். அதற்காகவே தன்னை முழுமையாக அர்ப்பணித்தார்.

ஒரு தந்தைக்கே உரிய உரிமையுடனும் பாசத்துடனும் போராளிகளை வழிநடத்திய ஒரு போரியல் அறிவாளன், ராஜு அண்ணா! என போராளிகளால் அன்பு செய்யப்பட்டதொரு பொறுப்பாளன். தலைவருடன் அருகிருந்து பல போரியல் வெற்றிகளை தேசம் அடைய உழைத்த எங்கள் மூத்த தளபதி 25.08.2002 அன்று சுகயீனம் காரணமாக சாவைத்தழுவிக்கொண்டார். விடுதலையை உச்சரித்தபடி விதையாகிப்போன எங்கள் தளபதிக்கு எங்கள் வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

மாவீரர்நாள் நிகழ்வுகள் 2001

அவுஸ்திரேலியா

பிரான்ஸ்

கனடா

ஜேர்மனி

டென்மார்க்

இங்கிலாந்து

நெதர்லாந்து

மாவீரர்நாள் நிகழ்வுகள் 2001

சுவிற்சர்லாந்து

நியூசிலாந்து

தமிழீழம்

நோர்வே

ரஷ்யா

அமெரிக்கா

சவுதி அரேபியா

அவரொரு வித்தியாசமான மனிதர். எப்போதுமே சீரான, நேர்த்தியான தோற்றத்துடனே தோன்றுவார். சீராக வகிடெடுத்து அழுந்த வாரப்பட்ட தலையும், பரந்து தெளிவாக காணப்படும் முகத்தில் நகைப்பும், வியப்பும், கூர்மையும் காண்பிக்கும் கண்களும் இறுகக் கால்பதித்து நிலமதிர நடக்கும் கனத்த உருவமும் அசாதாரண மனிதரிவர் என்கிற பதிவை எவரிடத்திலும் ஏற்படுத்தும். எப்பொழுது சந்திக்க நேர்ந்தாலும் தோளைக் குலுக்கிக் குலுக்கி தலைசரித்து இலேசான செருமலுடன் கண்களை நேராகப்

ஆழமாக உணர்ந்த அரசியலாளன். ஒருபுறத்தில் தமிழீழ வானூர்தி துறையின் முதல்வன். கடற்புலிகளின் துணைவன்; மறுபுறத்தில் காடுசார் போர்முறையின் ஆற்றலாளன். காட்டின் நாயகனாகவும் நகரின் கனவானாகவும் அவரால் இருந்திடமுடியும்.

புத்துலகின் வேகமான மாற்றங்களை உள்வாங்கி சர்வதேச நடப்புக்களின் மிகப் பிந்திய நிலைமைகளோடு தன்னையெப்பொழுதும் இணைத்துக்கொள்வதில் ஆர்வமுள்ளவர். வேகமும் வீச்சும் பரபரப்பும் கொண்ட இளமையை படிப்படியாக விரிவுசெய்து

உருக்கினுள் உறைந்த பனிமலை

ச. வே. பாலகுமாரன்

பார்த்து பயனுள்ள உரையாடலொன்றிற்கு அவர் ஆயத்தமாகும் தோற்றம் என்றும் எம் மனதில் நிழலாடும். எந்தவொரு விடயமானாலும் தனது உறுதியான நிலாப்பாடுடனும், மேலும் விபரங்களை அறியும் நோக்குடனும் அவர் நடத்தும் உரையாடல்கள் எவர் காதிலும் ஒலித்தவண்ணமேயிருக்கும்.

அன்று திலீபனின் நினைவு நாளன்று அதிர்ந்த வெடியோசை கேணல் சங்கரை எம்மிடமிருந்து பறித்துவிட்டது என்றறிந்தபோது துயரத்துடன் வெறுமையுணர்வும் மிகுந்தது. இவ்வெறுமையுணர்வு இதுவரை எம்மால் உணரப்படாதது. இன்று மாவீரர் கேணல் சங்கரின் இழப்பென்பது எமக்கு அறிவின் வறுமை, ஆளுமையின் வெறுமை என்றாகிவிட்டது. மனம் நெடுமூச்செறிகின்றது.

மாவீரர் கேணல் சங்கர் பன்முகப்பரிமாண ஆற்றல்கொண்ட அபூர்வமனிதர். இவ்வுலகின் தனித்தனியான ஆற்றல்களைக் கொண்டவர்களையே பொதுவில் நாமறிவோம். ஆனால் பற்பல ஆற்றல்கள் ஒரு மனிதரிடம் தொதிந்திருப்பவை காண்பதரிது. ஒருபுறத்தில் பார்த்தால் நவீன மின்னியலுலகின் தொழில்நுட்ப பொறிமுறையறிந்த விற்பன்னன்; மறுபுறத்தில் விடுதலை, வரலாறு, அரசியல், சர்வதேச நடப்புக்களை

தனது மனப்பரப்பை விசாளித்து பரிவு, பொறுமை, பக்குவம் கொண்டதொரு முதிர்ச்சி நிலையாக அவர் மாற்றிக்கொண்டது ஒரு விடுதலைப் போராளி படிப்படியாக வளர்ச்சிகண்டு அடையவேண்டிய நிலையை காட்டுகின்றது.

எண்பதுகள் தொட்டு அவரது வாழ்வு அல்லது வரலாறு விடுதலைப் போராட்டத்தோடு இரண்டறக்

கலந்துவிட்டது. தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் செல்நெறிப்போக்கினை நெறிப்படுத்தும் தலைவர் உடனிருந்து, அவர் மனம்புரிந்து, கருத்துப்பரிமாறி, கலகலப்பாக்கி அன்றிலிருந்து உயிர் பறிக்கப்பட்ட அன்றைய நாள்வரை இடைவிடாது இயங்கிய பெருமை அவருக்குரியது. அவரது வரலாற்றின் சிறப்பான பக்கங்களாக கருதப்படும் மணலாற்றுக் காலகட்டம் அவரது ஆளுமைய உணர்த்திநிற்கின்றது. அவரது அறிவியல், வனத்தின் இரகசியங்களை போராளிகளுக்குக் கற்றுக்கொடுத்து வனவாழ்க்கைக்கு அவர்களை இணக்கியது. அவரது இறுக்கமான ஒழுக்கக் காட்டுப்பாடு வனத்தில் மிக அருந்தலாகக் கிடக்கும் உணவு, குடிநீர் போன்றவற்றை சீராகப் பங்கிட்டு, அவரது உன்னிப்பான கவனப் பார்வை விடப்படும் சிறுதவறுகள் பெருந்தவறுகளாகி அழிவுகளை ஏற்படுத்தாமல் தடுத்து - இயக்கத்தின் அதிநெருக்கடியான காலகட்டமொன்றிலிருந்து தலைமையைப் பேணி மீள உதவிற்று. அன்று அவர் தம்மை 'குட்டிக் குட்டி' வளர்த்த கதையை அன்று அவருடன் இயங்கிய போராளிகள் சொல்லிச் சொல்லி மாய்கின்றார்கள்.

இவ்வாறான இவ்வரசியல், இராணுவ, அறிவியல் பக்கங்களை விட அவரது 'மனித உறவாடல்கள்' மிக வேறுபட்டதொரு தளத்தில் செயற்பட்டமை அதியசயிக்கத்தக்கது. பொதுவில் இத்தகைய ஆற்றல்கள்பெற்றோர் வேலைப்பழு, இரகசியம் காத்தல் மனப்போக்கு போன்ற ஏதாவதொரு காரணத்தால் 'தனிமைப்பட்டிருப்பது' வழமை. ஆனால் கேணல் சங்கரோ மனித உறவுகளை சீராக தொடர்ச்சியாகப் பேணுவதில் பெரும் கவனம் செலுத்தினார். வன்னியின் மூத்தோர், அனுபவம்மிக்க கமக்காரர், பல்வேறு துறைசார்ந்தோர், கல்வியாளர், உயரதிகாரிகள் எல்லோருடனும் 'முறைவைத்து' நேர்த்தியான உறவைப் பேணிவந்தார். இளவயதில் வாழ்க்கைப் போராட்டத்தில் எதிர்நீச்சல்போட்டு தங்களை வளர்த்த அருமைத் தாயாரின் அறிவு, ஆற்றல், துணிவு, வாசிக்கும் ஆர்வம் போன்ற இயல்புகளை உள்வாங்கி வளர்ந்த கேணல் சங்கர் போராளிகளின் குடும்பநலன்,

வளர்ந்த கேணல் சங்கர் போராளிகளின் குடும்பநலன், விழுப்புண்பட்டோர் நலன், மணமுடிக்க ஆயத்தமாவோர், மணமுடித்து மகப்பேற்றினை எதிர்பார்ப்போர், மகவினைப் பெற்றெடுத்தோர் எல்லோருடனும் 'தாயன்பினைக்' காட்டி அன்புடன் உறவாடினார். அவரது நெஞ்சத்தறையில் ஒவ்வொரு போராளிக்கும் தனித்தனிப் பதிவுகளை பேணிவந்தார். ஆண் சகோதரர்களுடன் வாழ்ந்த அவர் இளம் சிட்டுக்களாகச் சிறகடிக்கும் பெண்குழந்தைகளைக் கண்டால் தானும் குழந்தையாகிவிடுவார். இயற்கையின் நண்பனவர். தாவரங்களோடும் அவருக்கு உறவிருந்தது. அவரது பண்ணைகளில் அவர்கையால் நட்டு வளர்த்த மரங்கள் என்றும் அவர் பெயர் சொல்லும்.

இத்தகையதொரு மாவீரனை எதிரி எம்மிடமிருந்து பறித்துவிட்டான். ஆனால் எம்மிடம் செறியவைக்கப்பட்டுள்ள அவரது நினைவுகளை எவராலும் பறிக்கமுடியாது. அவரது ஆளுமையின் ஒரு பகுதியேனும் அவரால் வளர்க்கப்பட்டோரிடம் தங்கியிருப்பதை எவராலும் இல்லாமற் செய்துவிடவும் முடியாது. இம்மண்ணின் விடிவிற்கான முழுமையான அர்ப்பணம் அவரது வாழ்வு; எல்லார்க்கும் கிட்டிடாத பேறு அவரது வரலாறு. எம் மண்ணில் மலர்ந்திடும் மலர்களிலும் பிறந்திடும் குழந்தைச் செல்வங்களிலும் அவரது அமைதியான புன்முறுவல்பூத்த முகம் தெரிவதை இனியென்றும் நாம் காண்போம்.

அடுத்த மாவீரர் நாளில்......

– இரா. திருமாறன் (போராளி)

எங்கள் சுவாசக் காற்றிலும்
சுதந்திரக் கனவிலும்
இரண்டறக் கலந்தவரே...
உங்கள் அருகெல்லாம்
பற்றிப் பரவியுள்ள
எதிரியின் காலடித் தடங்கள்



இன்று வரையும்
அகற்றப்படாததற்காய்
எமை முதல் மன்னியுங்கள்!

ஐந்தாண்டின் முன்
அந்நிய ஆக்கிரமிப்பால்
உங்களின் ஆன்மா
அவமதிக்கப்பட்டது கண்டு
நாமெல்லாம் நாளும் பொழுதும்
கனன்று கொண்டிருக்கின்றோம்...
எங்கள் சுடுகலன்கள் போலவே!

உயிரைப் பறித்து,
உறவை அறுத்து,
ஊரையே கலைத்து,
இழப்பதற்கு ஏதுமற்ற
ஏதிலி நிலையில்
எம் மக்களை ஆக்கிய பின்
உங்கள்
கல்லறை சிதைத்த
அந்தக் கடைநிலை மனிதர் தன்னை
கல்லறைக்கு அனுப்பும் நாட்கள்
(எங்களால்) எண்ணப்படுகின்றன
இனியொரு போதும் இல்லை
பாவ மன்னிப்பு - அவர்களிற்கு !!
அடுத்த மாவீரர் நாள்
அது உங்களோடு தான்.

எங்கள் இருப்புக்காய்...

ஒரு புலர் பொழுது
இசைக்கும் பூபாளத்தின்
சுருதிகளே!
விடியல் இசையின்
கருக்களே!
மலர்களைத் தழுவி வரும்
தென்றலும்,
உங்கள் மேனி தழுவி
சூடானது வரலாறு.

கழிந்து போன இரவுகளில்
கலங்கிப் போன வாழ்வின்
திருப்பு முனைகளே! - நீங்கள்
மின்னல் கீற்றுக்களாய் ஒளிகாட்டி,
இடியாய் முழங்கி,
மௌனமானீர்கள்!

உங்கள் மௌன அத்திவாரத்தில்,
சூல் கொண்டு சுழலும் அக்கினித் தீ
பகை முகாம்களில்
ஊழிக் கூத்தாடும்!!

கடலிலும் தரையிலும்,
நீங்கள் வெடித்த ஓசை
உலகத்தின் செவிப்பறைகளில் மோதி:
விடியலின் செய்தியை உரைத்தது.

வீசும் காற்று
சுதந்திரமானது.
அதைச் சுவாசிக்கவே
விரும்புகின்றோம்.
தேசத்தின் விடியல்,
விடியலின் அறைகூவலாய்
ஒலிக்கிறது.

சாவுக்குள் வாழ்வு தேடிய
சரித்திரங்களே!
பூவுக்குள் புகுந்து கொண்ட
புதுமைகளே!
நாவுரைக்கும்
நல்லகதி பெற்றீர்.
காலம் மறக்காது
கதை சொல்லும்!

எங்கள் இருப்புக்காய்
எழுந்தீர்கள்!
எங்கெல்லாமோ
முகம் தெரியாமல்
வெங்களத்தில்
செங்கம்பளம் விரித்து
பகை முடித்த எரிமலைகளே!

நீங்கள் வெடித்த போதெல்லாம்
எங்கள் நெஞ்சங்கள் கசிந்தாலும்
விடிவெள்ளி
முளை கண்டு நிமிர்ந்தோம்.
தாய்மடியின் புதையல்களே!
உங்கள் நாமம்
உயிர் வாழ,
எங்கள் கைகள்
உயர்கின்றன.

– முருகு பாரிமகன்

பேறுபெற்றீர்

அ. அன்ரனி
(போராளி)

நீலவான் உரசிவரும்
முகிற்கூட்டம் விலக்கி
முகம் காட்டும் முழுமதியே
நாளும் உன் குளிர்ஒளியை – எம்
மாவீரர் கல்லறை மீது பாய்ச்சு – அவர்
இருள் வாழ்வை விரும்பாதவர்.
ஒளி தேடியே விதையானவர்.

காடு
மேடு
மலையெனத் தடவியே
வீசிவரும் ஊதற்காற்றே
நீ பேறு பெற்றாய்
உயிர் பிரியும் கணமதில்
உன்னத வீரரிவர்
உன்னோடு கலந்ததினாலே.

சில்லென்ற குளிர்ஓடையில்
மெல்லென முகை அவிழ்த்திடும்
மலர்க்கூட்டமே
நீங்கள் பேறு பெற்றீர்கள்.
உங்களைக் கொண்டெங்கள் மாவீரர்
கல்லறைகளை நாம் தொழுவதினாலே.

அசோக வனம்

கி.பி. 1995 (க்குப்பின்)

நேற்றுப் பெய்த சிறுமழையில்
நனைஞ்சு போனோம் நாங்க- அத
நாளை வரும் வெய்யிலுக்கு
சொல்ல வேணும் நாங்க.
நேற்றடிச்ச சிறுகாற்றில்
சாய்ஞ்சு போனோம் நாங்க - அத
நம்மை வளத்த சோளகத்துக்கு
சொல்ல வேணும் நாங்க.

கெடுகுடி சொற்கேளாதெண்டு
அப்பாச்சி ஒருக்கா சொன்னவா - நாங்க
கெட்டழியக் கூடாதெண்டு
ஆசையப்பா சொன்னவர்.

கூத்தடிக்க நினைச்சம் இங்க
குடிமுழுகிப் போனம் - சின்னக்
காத்தடிக்க சாஞ்சு போற
நாணலாகிப் போனம்.

எங்கட மதகோரத்தில
நிண்டு கதைச்ச நாங்க - பிறகு
இத்தி மரநிழலில ஒருக்கா
ஓடிப்பிடிச்சனாங்க
தொம்மாரெண்டு ஜீப்பில ஏறி
வந்து குதிச்சாங்க - நாங்க
தப்பியோடப் போறமெண்டு
துரத்திப்பிடிச்சாங்க.

முருகன் கோயில் தேருக்கல்லோ
போகேலாமப் போச்சு - ஒரு
முதுகுடைஞ்சு கிடந்தது
வேற கதையாச்சு
அருகிருக்கிற கடைக்குப் போக
ஐ.சி வேணுமாமே - இத
ஆரிட்டதான் சொல்லுறதெண்டு
மறந்துபோனம் நாம.

பெரியண்ணாவும் சின்னண்ணாவும்
தப்பிப் போயிட்டாங்க - அவங்க
பெரியம்மான்ர உதவியோட
திரும்பி வருவாங்கள்.
சுழியன் என்றும் முழியன் என்றும்
பட்டம் சொல்லுறநாங்க - நல்லா
'சுழிக்கப்பழகி' இருக்கிறாங்களாம்
வன்னியில அவங்க.

– மலர்மதனன்

உம்மை எண்ணி உருகும்போது
உயிர் கலங்கிடும் - உங்கள்
உறவை எண்ணும் பொழுது தலைவன்
விழி கசிந்திடும் - எதிரி

ஏற்றும் கொடிகள் எங்கள் மண்ணில்
இனியும் பறக்குமோ நல்மா
வீரர் உம்மை ஈழதேசம்
என்றும் மறக்குமோ!

– மாவீரர் கரும்புலி மேஜர் நிலவ

‘ஆளும் ஆசை எமக்கு இல்லை - தமிழீழம்
தானே எமது எல்லை!
தெளிவாகத் தெரியுதே எம் இலக்கு - ஈழ
திசையாவும் ஏற்றுவோம் ஒளிவிளக்கு’

– மாவீரர் மேஜர் மாதவன்

திலீபன் உன்னைச் சாகவிடுவதா?

– நிலாந்தன்

கைவிடப்பட்டவர்கள் நாங்கள்
கனவு காண்பவர்களாய்
பொய்யான சமாதானத்தால்
திசை திருப்பப் பட்டவர்களாய்
பூமியின் எல்லாப் பாகங்களிலும்
அகதிகளாய்
அழையா விருந்தாளிகளாய்
அவமானப்பட்டவர்கள் நாங்கள்

எங்களுக்காக
எங்கள் பாவங்களுக்காக
பசியோடிருக்கிறாய் நீ
தாகமாயிருக்கிறாய் நீ
சகோதரா....

நீ அருந்த மறுக்கின்ற
ஒவ்வொரு துளி நீரும்
உனக்காகச் சொர்க்கத்தில்
சேமிக்கப்படலாம்
உனது குரலையும் எடுத்துக்கொண்டு
ஒருநாள் புறாக்கள் பறக்கலாம்

ஆனால் உனன்னைச் சாகவிடமுடியாது.

காற்றைக் கடலை சூரியனை
நாம் மன்றாடுகிறோம்.

காற்றே கடலே சூரியனே
கையாலாகச் சமாதானமே
அவனைக் காப்பாற்றுங்கள்

ஒரு சருகைப் போல
ஒரு சிறகைப் போல
அவனுடல் இலேசாகி வருகிறது...

காற்றே அவனுக்காய்
மெதுவாய் வீசு.
கதிரவனே
அவன் பொருட்டாய்
குளிர்ந்துவிடு.

அவன் பாவம்
அவனுக்குத் தாய் இல்லை
சகோதரியும் இல்லை
கசியும் விழிகளோடு
தலைமயிரைக் கோதிவிட
காதலியும் இல்லை

அவனைச் சாகவிட முடியாது.

முறிக்கப்பட்ட ஒரு
உடன்படிக்கையின்
முதலாவது பலியாடா அவன்
ஒரதியசம் போல
ஏதாவது நிகழ்தாலொழிய
அவனைக் காப்பற்றவே
முடியாதா?

ஆயின்
அவ்வாறாயின்
அவனைச் சாவிட விரும்பும்
ஒவ்வொருவரும் அறிக.

அவனது பசி வலியது
அவனது தாகமும் வலியது
அதைவிட வலியது
எங்கள் சனங்களின் கோபம்.

1987 செப்ரெம்பர் 24
யாழ்ப்பாணம்

(திலீபன் உண்ணா நோன்பிருந்த நாட்களில் எழுதப்பட்டு நண்பர்களால் விநியோகிக்கப்பட்ட துண்டுப்பிரசுரம் இது. இப்பொழுது ஞாபகத்திலிருந்து மீட்கப்பட்டு மெருகிடப்பட்டு வருகிறது)

ஆதிக்கருக் கெதிராய்
எரிந்த தீயே
ஆனதா பதினைந்தாண்டுகள்
நீ போயே
நீதிக்காய் வீசிய புயலே,
வீரப்புலியே
நெஞ்சம் முழுவதும் ஒளியாய்
நிரம்பிய சுடரே

மீதிக்கனவுகளுனதை ஏற்றோமன்று
உனைவணங்கி
மிகவிரைவில் அதைமுடிப்போம் வென்று
வீதியுலா வருவாரெங்கள் மக்கள்
வெற்றியுடன்

அவர்வழியில்
உன்விழி பூத்திருக்கும் களிப்புடன்

உன் நெஞ்சிருக்கும் நினைவுடனே
வெஞ்சமர்கள் வென்றோம்
நீயுரைத்த மொழி வழியெம்
கொள்கையெனக்
கொண்டோம்
பார்த்திரு
பாதையெங்கணும் பூக்கும்
மக்கள் புரட்சியில்
உனது கனவு நினைவாகும்

நினைவுகளில் வாழும் கிட்டு



வங்கக் கடலின் நடுவே அந்த தியாக வேள்வித் தீ எரிந்து அணைந்து இன்றுடன் ஒன்பது ஆண்டுகள் ஓடி மறைந்துவிட்டன. ஆனால், தமிழ் மக்களின் மனங்கள் அதை நினைத்து நினைத்து இன்னும் எரிந்துகொண்டேயிருக்கின்றன. கேணல் கிட்டுவும், அவருடன் வந்த ஒன்பது தோழர்களும் தீயோடு தீயாகி, வங்கக் கடலில் சங்கமித்த அந்தச் சம்பவம் சரித்திரம் மறக்காத ஒரு சாவு மட்டுமல்ல, அது எங்கள் நெஞ் சங்களை நீங்க மறுக்கும் நெடும் அலையாகி, நினைவெங் கும் நிலைபெற்றுவிட்டதொன்று. கேணல் கிட்டு தேசியத் தலை வரால் அதிகம் நேசிக்கப்பட்டவர். அவரின் அன்பை அனுப வித்தவர். தலைவரின் இலட்சியத்திற்கு தோள்கொடுத்து அவ ரின் மனதோடு ஒன்றித்து வாழ்ந்தவர்.

அதனால்தான், தமிழீழத் தேசியத் தலைவர் 'கிட்டுவை ஆழமாக நேசித்தேன், தம்பியாக, தளபதியாக, எனது சுமைக ளைத் தாங்கும் உற்ற தோழனாக நான் அவனை நேசித்தேன். இது சாதாரண மனித பாசத்திற்கு அப்பாலானது. ஒரே இலட் சியப்பற்றுணர்வில் ஒன்றித்து, போராட்ட வாழ்வில் நாம் பகிர்ந்துகொண்ட அனுபவத்தில் ஒருவரையொருவர் ஆழமாக இனங்கண்ட புரிந்துணர்வில் வளர்த்த நேயம் அது' என கேணல் கிட்டுவிற்கும் தமக்கும் இடையே இருந்த பாசப் பிணைப்பினை வெளிப்படுத்துகிறார். கிட்டு எந்தளவிற்கு தலை வரின் மனதில் இடம்பிடித்தாரோ அதேயளவு தமிழீழ மக்களின் மனங்களிலும் நிறைந்திருக்கின்றார். எந்தக்காலத்திலும் மறக்க முடியாத அவரின் நினைவுகளோடு இன்று தமிழீழம் நிமிர்ந்து நிற்கிறது. தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் ஆரம்ப காலத் திலிருந்து ஆழப்பதிக்கப்பட்ட கிட்டுவின் வரலாற்றுத் தடங்கள் அழிக்க முடியாத பெரும் பதிவாக பரிணமித்து, தொடர்ந்து கொண்டே இருக்கின்றன.

1979ல் ஆரம்ப காலப் பகுதி விடுதலைப் போராட்டத்திற்கு அடித்தளமிடப்பட்ட காலம், சதாசிவம் கிருஸ்ணகுமார் என் னும் பதினெட்டு வயது நிறைந்த இளைஞன் தன்னை விடுத லைப் போராளியாக மாற்றியதன் மூலம் வெங்கிட்டு எனப் பெயர் மாற்றம் பெற்று, பின் கிட்டு என தோழர்களால் செல்லமாக அழைக்கப்பட்டார். கிட்டுவும், இன்னும் சில தோழர்களும் தலைவரிடமே போரியலை நேரில் கற்றார்கள்.

பெயர் மாற்றம் பெற்று, பின் கிட்டு என தோழர்களால் செல்லமாக அழைக்கப்பட்டார். கிட்டுவும், இன்னும் சில தோழர்களும் தலைவரிடமே போரியலை நேரில் கற்றார்கள். கிட்டுவின் துடிப்பும், வேகமும் அங்கிருந்தவர்களிடையே அவரை வேறுபடுத்திக்காட்டியது. எதையும் அறிந்து கொள்ள வேண்டுமென்ற வேகமும் எந்த விடயத்தையும் அறிந்துகொள்ளும் ஆற்றலும் கிட்டுவிற்கு இயல்பாகவே இருந்ததால் தலைவரின் எண்ணங்களை, சிந்தனைகளை, மக்கள் மீது அவர் கொண்டிருந்த எல்லை கடந்த பாசத்தை, தலைவரின் அருகில் இருந்த கிட்டு அறிந்துகொள்கிறார். அளவு கடந்த திறமையுடன் வேகமும் விவேகமும் நிறைந்த அவரது செயற்பாடுகள் அவர் மீதான தனி நம்பிக்கை வளரக் காரணமாகின்றன. தன் மீது தலைவர் வைத்திருக்கும் நம்பிக்கையை நிரூபிக்கும் காலம் கனிந்துவரும் வரை கிட்டு காத்திருக்கிறார். 1983 மார்ச் 04-இல் அற்புதன் தலைமையில் உமையாள்புரம் தாக்குதலுக்காக விடுதலைப் புலிகளின் அணி ஒன்று செல்கிறது. அதில் கிட்டுவும் ஒருவர், தாக்குதலுக்கான களம் தீர்மானிக்கப்படுகிறது. வீதியில் நிலக் கண்ணிவெடிகளை பொருத்திவிட்டு எதிரியின் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். கண்ணிவெடிகளை கையாளும் போதியளவு செயற்திறன் போராளிகளுக்கு இல்லாத காலம் அது. இராணுவ வாகனங்கள் இலக்காக அண்மிக்கும் நேரத்தில், துரதிஸ்டவசமாக வாகனங்களைக் கண்டு மிரண்டு ஓடி வந்த ஆட்டுக்குட்டியின் கால்கள் பட்டு கண்ணிவெடிகள் வெடிக்க போராளிகள் நிலை குலைந்து போகிறார்கள். துப்பாக்கி ரவைகளைக் கக்கியவாறு இரு இராணுவ கவச வாகனங்கள் போராளிகளை நெருங்கிவர, பின்வாங்கிச் செல்வதைத்தவிர வேறு வழி அவர்களுக்குத் தெரியவில்லை. ஆனால், கிட்டு மட்டும் எதிரியை எதிர்கொள்ளும் சாதகமற்ற களநிலையைக் கருத்திற்கொள்ளாது துணிந்து நின்று தான் வைத்திருந்த ஜீத்திறி (G-3) துப்பாக்கியால் இராணுவ கவசவாகனத்தை நோக்கிச் சுடுகிறார். இலக்குத் தவறவில்லை. சாரதி காயப்பட வாகனம் செயலற்றுப் போகிறது. தலைவரின் நம்பிக்கையை மெய்ப்பித்த மகிழ்ச்சியோடு கிட்டு களம்விட்டு அகன்றார். அவரின் முதல் களமே தனி மனித சாதனையாக ஆரம்பமாகிறது. 1983 ஏப்ரல் 07-இல் விடுதலைப் புலிகளின் தாக்குதல் அணியில் கிட்டு இரண்டாவது பொறுப்பாளராக நிலையுயர்த்தப்பட்டார். இதன்பின் சிறீலங்கா அரசால் திணிக்கப்பட்ட உள்ளூராட்சித் தேர்தலை பகிஸ்கரிக்கும் பொருட்டு கந்தர்மடம் வாக்குச்சாவடியில் இராணுவம் மீது நடாத்தப்பட்ட தாக்குதல், ஜூலை 23ல் இராணுவ வாகனங்கள் மீது நடாத்தப்பட்ட திருநெல்வேலிக் கண்ணிவெடித்தாக்குதல் என்பனவற்றிலும் கலந்து கொள்கின்றார். இவ்வாண்டின் இறுதிக் காலத்தில் இந்திய மண்ணில் பயிற்சிக்கெனச் சென்ற இயக்கத்தின் முதற்குழுவின் இரண்டாவது பொறுப்பாளராக கிட்டு நியமிக்கப்படுகின்றார்.

பயிற்சியை முடித்து தமிழீழம் வந்த கிட்டு 1984 மார்ச் 02-இல் நடைபெற்ற குருநகர் இராணுவ முகாம் தாக்குதல் உட்பட்ட பல்வேறு தாக்குதல்களில் முக்கிய பங்கு வகித்து நெறிப்படுத்துகின்றார். இதேநேரம் யாழ். மாவட்டத் தளபதியாக இருந்த கப்டன் பண்டிதர் 1985 ஜனவரி 09-இல் எதிரியுடனான மோதலில் வீரச்சாவடைய அவரின் இடத்திற்கு கிட்டு தலைவரால் நியமிக்கப்படுகின்றார். யாழ். மாவட்டத் தளபதி ஆனவுடன் யாழ். பொலிஸ் நிலையத் தாக்குதலுக்குப் பொறுப்பேற்று நடாத்தி, அங்கிருந்த பெருந்தொகையான ஆயுதங்களைக் கைப்பற்றினார். யாழ். மாவட்டத்தில் கிட்டுவின் வெற்றிகரத் தாக்குதல்கள் தொடர்ந்தன. எதிரிப்படை யாழ். மண்ணில் அவனுடைய முகாமுக்குள்ளேயே முடக்கப்படுகிறது. யாழ். கோட்டையை ஆக்கிரமித்திருந்த சிறீலங்கா இராணுவம் கிட்டு என்ற பெயரைக் கேட்டாலே கதிகலங்கிப் போகும் நிலை உருவானது. மக்கள் மத்தியில் கிட்டு என்ற மூன்றெழுத்துப் பெயர் மந்திரமாக உச்சரிக்கப்படுகிறது. யாழ். மண்ணில் எதிரிப்படையை மட்டும் அவர் வெற்றிகொள்ளவில்லை. மாறாக, மக்களின் மனங்களையும் அவர் வெற்றிகொண்டார். மக்கள் பிரச்சினையைத் தீர்ப்பதில் அவர் அதிக அக்கறை செலுத்தினார். தொழில் நிலையங்கள், நூலகங்கள், மலிவுவிலைக் கடைகள், பூங்காக்கள் என்பவற்றை நிறுவி மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்தினார். இவ்வாறாகக் கிட்டுவின் சமூகப்பணிகள் விரிவடைய, அவர் தமிழீழத் தேசியத் தலைவரின் சிந்தனைகளைப் பிரதிபலிக்கும் ஒரு ஒப்பற்ற போராளியாக மக்களால் உணரப்பட்டார். தமிழீழ மக்கள் மனங்களில் மாத்திரமல்ல, எல்லைகடந்து வாழும் தமிழ் உறவுகள் அனைவருமே கிட்டுவின் வீர சாதனைகளை அறிந்து பெருமிதம் அடைந்தார்கள். விடுதலைப் புலிகளால் மன்னாரில் வைத்துச் சிறைப்பிடிக்கப்பட்ட இரு சிங்களச் சிப்பாய்களின் விடுவிப்பு தொடர்பாக 1986 நவம்பர் 10-இல் சிங்கள இராணுவத் தளபதியான கேணல் ஆனந்த வீரசேகரா, கப்டன் கொத்தலாவை ஆகியோரை தனது இடத்திற்கு அழைத்துச் சந்தித்ததன் மூலம் கிட்டு என்ற பெயர் சிங்கள மக்கள் மத்தியிலும் பிரபல்யம் அடைந்தது. 1987 மார்ச் இறுதியில் தேசத்துரோகி ஒருவனின் கைக்குண்டுத் தாக்குதலினால் தனது இடது காலை இழந்த கிட்டு தனது மனஉறுதியால் முன்னைய வேகத்துடனும், திடகாத்திரத்துடனும் விடுதலைப் போருக்கு வலுச்சேர்ப்பவராக வளர்ந்து வந்தார். இந்திய இலங்கை ஒப்பந்த காலத்தில் தனது சிகிச்சைக்காக இந்தியா சென்ற கிட்டு ஒப்பந்தம் முறிவடைந்த நிலையில், இந்திய அரசினால் திணிக்கப்பட்ட போரின் உண்மை நிலைப்பாட்டை வெளிக்கொணர பெரிதும் பாடுபட்டார். இந்திய அரசியல் தலைவர்கள், பத்திரிகையாளர்கள், கலைஞர்கள், பேராசிரியர்கள் எனப் பலரையும் சந்தித்து, எமது நிலைப்பாடு தொடர்பாக எடுத்துரைத்தார். எமது தியாக வரலாறுகளை பல வெளியீடுகள் மூலம் இந்திய மக்களின் பார்வைக்குக் கொண்டுவந்தார். இவ்வாறான நிலையில் கிட்டுவை இந்திய அரசு வீட்டுக்காவலிலும், சென்னை மத்திய சிறையிலும் கைதியாக அடைத்துவைத் திருந்தது.

சிறைக்குள் இருந்தபடியே அவர் தமிழகத்திலிருந்து வெளிவரும் தேவி இதழுக்கு போராட்டம் தொடர்பான நீண்ட தொடர் கட்டுரையை எழுதினார். சிறையிலிருக்கும் தன்னை விடுவிக்கும்படி கிட்டு நடாத்திய அகிம்சைப் போருக்கு அஞ்சிய இந்திய அரசு அவரை தமிழீழத்தில் விடுதலை செய்தது. விடுதலை பெற்ற கிட்டு வன்னிக்காட்டில் தலைவரைச் சந்தித்து இந்திய இராணுவத்திற்கு எதிரான போருக்கு இறுதிவரை முகங்கொடுத்தார்.

இந்திய இராணுவம் மெல்ல மெல்ல தோல்விமுகம் காணும் நிலை உருவானது. அமெரிக்காவிற்கு வியட்நாமும், ரஸ்யாவிற்கு அப்கானிஸ்தானும் புகட்டிய பாடத்தை தமிழீழம் இந்தியாவிற்குப் புகட்டியது. இந்நிலையில் இலங்கை அரசு இந்தியாவை நிராகரித்து புலிகளுடன் பேச முன்வந்தது. 1989-இல் சிறீலங்கா அரசுடன் பேசுவதற்கு கொழும்பு சென்ற குழுவில் அங்கம் வகித்த கிட்டு விடுதலைப் புலிகளின் வெளிநாட்டுப் பிரிவுப் பொறுப்பாளராக அங்கிருந்தபடியே லண்டனுக்குப் பயணமானார். கிட்டு லண்டனில் வாழ்ந்த காலத்தில் புலம்பெயர்ந்து வாழ்ந்த தமிழரிடையே போராட்ட உணர்வையும், நம்பிக்கையையும் ஊட்டினார். 'களத்தில்', 'எரிமலை' எனப் பல்வேறு சஞ்சிகைகள் மூலம் ஈழத்தில் நடக்கும் நிகழ்வுகளை மக்களுக்கு எடுத்துச் சென்றார். விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு, விடுதலைப் புலிகளின் கலைபண்பாட்டுக் கழகம், எனப் பல்வேறு அமைப்புக்களையும் வெளிநாட்டில் அமைத்துச் செயற்பட்டார். விடுதலை உணர்வையும், தாய் மண்ணின் பற்றுறுதியையும் தாயக மண்ணை விட்டு புலம்பெயர்ந்த மக்கள் மறந்து போகாவண்ணம் தனது செயற்பாட்டை விரிவுபடுத்தினார். எனினும் கிட்டு எங்குதான் வாழ்ந்தாலும் எப்பணியைச் செய்தாலும் அவர் மனம் தமிழீழ மண்ணையே சுற்றிவந்தது. அவர் தலைவரை, தாயகத்தை, தமிழீழ மக்களை ஆழமாக நேசித்தார். தமிழீழத்தில் எப்போது தனது கால் மீண்டும் பதியும் என ஏக்கத்தோடு காத்திருந்தார். கிட்டு எதிர்பார்த்திருந்தது போல தமிழீழத்திற்குச் செல்லும் வாய்ப்பு அவருக்குக் கிட்டியது. குவேக்கஸ் சமாதானக் குழுவின் யோசனைகளுடன் ஐரோப்பிய நாடொன்றிலிருந்து சர்வதேச கடற்பரப்பினூடாக எம்.வி அகத் என்ற கப்பலில் கிட்டுவும் அவரது தோழர்களும் பயணமானார்கள். யாரும் சென்று வரக்கூடிய சர்வதேச கடற்பரப்பில் இந்தியா தனது சதிவலையைப் பின்னியது. இந்தியக் கடற்படை சர்வதேச கடல் எல்லையில் கிட்டுவின் கப்பலை மறித்து வலுக்கட்டாயமாக தனது எல்லைக்குள் இழுத்துச் சென்றது. சமாதான முயற்சிகள் பற்றி இந்திய அரசிடம் எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் அவை பயனற்றுப் போயின. குமரப்பா, புலேந்திரன், திலீபன், ஜொனி என எமது தளபதிகளின் தொடர் இழப்புக்குக் காரணமான இந்தியா தனது பொறிக்குள் மூத்த தளபதி கிட்டுவையும் சிக்கவைத்தது. உயிரிலும் பெரிது தன்மானம் என நினைக்கும் தலைவனின் வழியில் வளர்ந்த கிட்டுவும் ஒன்பது தோழர்களும் அன்று ஆட்சியிலிருந்த இந்திய அரசிடம் பணிந்து போகாது, தமிழீழத்தை, தலைவனை நினைத்தவாறே தீயில் கலந்து கடலில் சங்கமித்துப் போனார்கள். கேணல் கிட்டுவின் இறுதி அஞ்சலி நிகழ்வில் தமிழீழத் தேசியத் தலைவர் கலந்துகொண்டார். கிட்டுவின் இழப்பு தலைவனின் ஆத்மாவை மாத்திரமல்ல, தமிழினத்தின் ஆத்மாவையே பிழிந்த ஒரு சோக நிகழ்வு. மக்களால் மனதாரப் போற்றப்பட்ட அந்தப்பெரு வீரனை இனி எங்கு காண்போம் எனத் துடித்தனர் மக்கள். பல இழப்புக்களைக் கடந்து வாழக்கற்றுக்கொண்ட மக்களிற்கு கிட்டுவின் இழப்பு ஜீரணிக்கமுடியாததொன்றாகவே இருந்தது. எனினும் தோல்விகளையும், இழப்புக்களையும் தனக்கான வெற்றியின் பாடமாக்கிக்கொள்ளும் தலைவர், கிட்டுவின் இழப்பிற்கு புதிய பரிமாணத்தைக் கொடுக்கின்றார். 'கிட்டு நீ சாகவில்லை, ஒரு புதிய மூச்சாக பிறந்திருக்கிறாய்' எனக்கூறி தனக்குள் ஒரு வீரசபதம் எடுத்துக் கொள்கிறார். இன்றைய உலகில், தமிழினத்தின் விடுதலைப் போராட்டம் எவராலும் நிராகரிக்க முடியாத பெரும் வடிவம் எடுத்ததில் கிட்டுவின் பங்கு இன்றியமையாதது. உலகெங்கும் சிதறிவாழ்ந்த தமிழ் மக்களை ஒருங்கிணைத்து, தமிழீழ விடுதலையை நோக்கி அவர்களை அணிதிரட்டுவதில் கிட்டு வெற்றி கண்டார் என்றே சொல்லவேண்டும். அந்தநிலை இன்று இன்னும் விரிவடைந்து மக்கள் - புலிகள் என்ற வேறுபாட்டை இல்லாதொழித்துவிட்டது. சர்வதேச சமூகம் விடுதலைப் போராட்டங்களையும், பயங்கரவாதத்துடன் இணைத்து தனது பிற்போக்குத் தனமான செயலை நியாயப்படுத்திவரும் வேளைகளில்கூட, உலகெங்கும் பரந்து நிற்கும் தமிழ் மக்கள் அந்த நெருக்கடிக்கு முகம் கொடுத்து தொடர்ந்தும் எழுச்சி கொள்கிறார்களென்றால் அது கிட்டுவால் அன்று விதைக்கப்பட்ட விடுதலை குறித்த கருத்துருவாக்கமும் விழிப்புணர்வுமே அடிப்படைக் காரணமாகின்றன. கெரில்லா அமைப்பாக இயங்கிய அந்த நாடகளில், சிறியரக ஆயுதங்களைக்கொண்டு பெரும் சாதனைகளை நிலைநாட்டிய அந்த ஒப்பற்ற வீரனின் பெயரிலே, இன்று தமிழீழ தாயகத்தில் உருவாக்கப்பட்டுள்ள கனரக ஆயுதங்களைக் கொண்ட மிகப்பெரிய படையணி தனது சாதனைகளால் உலகத்தை வியக்கவைக்கின்றது. போரியல் நுணுக்கமும் போரிடும் திறனும் கொண்ட கேணல் கிட்டு பீரங்கிப் படையணி எண்ணிலடங்கா சமர்க்களங்களில் ஈட்டிய பெரும் வெற்றிகள் மூலம், தனது சாதனைத் தடங்களை தொடர்ந்தும் பதித்துக்கொண்டிருக்கின்றது. நவீன போரியற்கலையில் தமிழனின் தேசியப்படை முன்னேறிச் செல்வதற்கு கிட்டுவின் கனவும் ஒரு காரணம். ஊடகங்களில் தமிழரின் உண்மையான முகம் வெளியில் தெரியவேண்டும் என்பதில் கிட்டு அதிக அக்கறை காட்டினார். தமிழினத்தின் நியாயப் போராட்டங்களை பயங்கரவாதப்படுத்தி உலகெங்கும் பொய்யுரைக்கும் சிறீலங்கா அரச ஊடகங்களையும் அவற்றைச் சார்ந்துநிற்கும் சர்வதேச ஊடகங்களையும் கடந்து, உண்மையான செய்திகள் உலகெங்கும் தெரிவிக்கப்படவேண்டும் என்

பதே அவர் கொண்டிருந்த எண்ணமாகும். இவை இன்று நிறைவேறிக்கொண்டிருக்கின்றன.

தமிழீழத்திலும் உலகெங்கிலும் வாழும் தமிழ் மக்கள் தங்களுடைய விடுதலைப் போராட்டத்தின் உண்மை முகத் தோற்றத்தை உணரக்கூடிய விதத்தில் தமிழ் ஊடகத்துறை பெற்றிருக்கும் அபரிமிதமான வளர்ச்சிக்கு கிட்டு வின் எண்ணங்களின் தாக்கமும் ஒரு காரணம். சிறுவர் நலன்பேணும் திட்டங்கள், கல்வி, அபிவிருத்தி, பொருண்மிய மேம்பாடு, சமூக மேம்பாடு என மக்கள் நலன்பேணும் திட்டங்க ளில் அவர் காட்டிய அதீத அக்கறையின் பய னாக இன்னும் எம்மண்ணில் இச்செயற்பாடுகள் பெரும் வளர்ச்சி பெற்ற நிலையில் முன்னெடுக் கப்படுகின்றன. இவற்றுக்கு மேலாக, ஒன்றுபட்ட தமிழினத்தின் எழுச்சியை இவர் கனவாகக் கொண்டிருந்தார். எதிரியின் இறுகிய பிடிக்குள் ளும் நிமிர்ந்து நின்று தமிழ் மக்கள் வெளிப் படுத்தும் உணர்வெழுச்சி கிட்டுவின் கனவிற்கு கட்டியம் கூறிநிற்கின்றது. எங்கும் எதிலும் எல்லாவற்றிலும் கிட்டு என்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறார். தமிழினத்தின் ஆன்மாவில் அழிக்கமுடியாததோர் இடம் அவருக்கு என்று முண்டு. எல்லையற்ற திறமைகளாலும் மக்கள் மேல் அவர் வைத்திருந்த உண்மையான பாசத் தினாலும் தமிழினத்தில் நீங்காத நினைவுகளை அவர் பதித்துச் சென்றிருக்கின்றார். இறுதிமூச்சு வரை தமிழினத்தின் தன்மானம் காத்து தமிழி னத் தலைவனுக்குப் பெருமையைச் சேர்த்த அந்த ஒப்பற்ற வீரனை எந்நாளும் எவராலும் மறக்கமுடியாது. ‘கிட்டு ஒரு தனிமனித சரித் திரம், நீண்ட ஓய்வில்லாத புயலாக வீசும் எமது விடுதலை வரலாற்றின் ஒரு காலத்தின் பதிவு’ எனக்கூறும் தமிழீழத் தேசியத் தலைவரின் எண் ணங்களோடு ஒன்றிணைந்து கேணல் கிட்டுவை நெஞ்சிலேற்றுவோம். அவர் நினைவு தினத்தில் உறுதியெடுத்துக்கொள்வோம்.

✡

அந்த நடுகற்களில் இரு புயற்பறவைகள்

வன்னிப்பெருநிலப்பரப்பின் புனிதத்திற்கும் - வீரத்திற்கும் அடையாளமாய் திகழ்வது மாவீரர்துயிலும் இல்லங்கள். தமிழீழத் தாயின் மண் பிளந்து உள்ளே ஆழ்ந்த தூக்கத்தில் தேசத்தின் குழந்தைகளை தாலாட்டும் புண்ணியபூமி.

அங்கே அவ்விரு நடுகற்கள்.....

துயர்துடைக்கும் பயணத்தில் தூரப்பறந்த புயற்பறவைகளான லெப்.கேணல் நாதன், கப்டன் கஜன் ஆகியோரின் நினைவுகளிற்கும், கனவுகளுக்கும் அடையாளங்களாக அவை நிமிர்ந்து நிற்கின்றது.

பாரிஸ் பந்தன் பகுதியில் உறங்கும் எங்கள் தேசத்தின் இரு வீரக்குழந்தைகளினதும் நினைவுக்கு வன்னி புண்ணியபூமியில் எழுந்து நிற்கும் அந்த நடுகற்கள் சாட்சியங்களாகப் பதிவுபெற்றுள்ளன.

தேசவிடுதலைப் பயணத்தில் கடும் உழைப்புக்கும் - தளராத நம்பிக்கைக்கும் நாயகமாகத் திகழ்ந்த லெப்.கேணல் நாதன் எனும் எங்கள் நாதன் அந்த நடுகற்களில் கம்பீரமாகத் திகழ்கின்றான். விடுதலைப் போரின் வெற்றிக்கு நிதிப்பலம் கனம் பொருந்திய தேவை என்பதைச் சரியாகக் கணித்து - அதற்காகவே வாழந்தவன் நாதன். தன் சாவின் பின்னரும் புகலிடத்தமிழர்களினதும் - புகலிடங்களில் இயக்கப் பணி புரிகின்ற உறுப்பினர்களிடமும் நிதி என்பதை உயிர்மூச்சாய் நிலைநிறுத்தியவாறு அவன் வாழ்வதாகவே உணர்கின்றோம். இன்று பலம் பொருந்திய படைப்பலத்துடன் தமிழர் பலம் கம்பீரமாய் நடை போடுகையில் - எமக்குள் எட்டிப்பார்க்கும் அந்தக் குட்டி கர்வத்தின் பின்னால் எங்கள் நாதனின் உழைப்பும், அவனிட்ட அத்திவாரமும் உள்ளது.

கப்டன் கஜனின் எழுத்தும் - வாழ்வும் புகலிடத் தமிழர்களின் வாழ்வியல், பண்பாட்டுத்தளத்தில் விடுதலைப் போரின் உயிர்ப்பான பக்கங்களை நிறுத்தும் பணியினுள் உயிர்வாழ்ந்தது. இன்று வன்னி நடுகற்களில் அந்தப் பேனா நிமிர்ந்து நிற்கின்றது.

இந்தப் புயற்பறவைகளின் உழைப்பும் - வாழ்வும் நாளை உருவாகும் எங்கள் தேசத்தின் வெற்றிக்கான அத்திவாரங்களாகத் திகழ்கின்றன.

மண்பிளந்து அடியும் - முடியும் காணமுடியாது வியாபித்த திரு உருப்பற்றி மத இலக்கியங்கள் பாடுகின்றன. ஆனால், நாங்கள் மண் பிளந்து அடியும் - முடியும் தெரியாது உணர்வெழுச்சியால் நிமிர்ந்து நிற்கும் மாவீரர்களின் வாழ்வு பற்றிப் பாடுகின்றோம்!.

நாற் சுவரே உலகமென
நம்பி நின்ற பெண்களைப்
பார் உலகை எனப்
பார்ப்பிக்கச் செய்தவளே.

பாரம் சுமக்கவல்ல
படைத்தது பெண்களை
வீரத்தரசிகளாய்
வீதியுலா வருவதற்கே யென
உரக்கச் சொன்னவளே,
மாலதி
நீயே வரலாற்றின் முதல்வரி.

'ஈழம்' தவிர்ந்தெந்த
இன்பமும் வேண்டாமென
களத்தில் வீழ்கையில்
கடைசியாய் நீ சொன்னாய்
பூட்டுடைத்து விடுதலைக்காய்
புறப்பட்ட மகளே - நீ
காட்டிச் சென்ற தெவ்வழி,
கடைசிவரை நாமும் அவ்வழி.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் 27-11-1982 தொடக்கம் 31-08-2002 வரை மாவட்ட வாரியாக வீரச்சாவடைந்த மாவீரர்கள் விரிப்பு

	யாழ்		மட்டு		வன்னி		திருமலை		முல்லை		மன்னார்		வெளி		மொத்தம்		
1982	01	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	-	01	00	01
1983	11	-	-	-	-	-	04	-	-	-	-	-	-	-	15	00	15
1984	20	-	07	-	03	-	08	-	06	-	06	-	-	-	50	00	50
1985	46	-	60	-	14	-	41	-	08	-	14	-	05	-	188	00	188
1986	91	-	92	-	20	-	48	-	21	-	36	-	09	01	317	01	318
1987	246	05	76	-	46	03	54	-	17	01	48	05	15	-	502	14	516
1988	126	07	114	01	39	01	37	-	18	01	18	01	16	-	368	11	379
1989	147	02	86	-	54	-	47	-	37	-	27	-	18	-	416	02	418
1990	277	41	178	04	140	11	124	02	73	11	64	01	33	02	889	72	961
1991	510	104	310	18	180	33	169	18	114	19	100	15	22	01	1405	208	1613
1992	224	46	240	09	83	06	65	01	40	07	48	06	13	-	713	75	788
1993	215	49	279	18	110	28	76	06	55	11	61	12	05	-	801	124	925
1994	90	11	161	-	30	-	40	-	18	01	22	-	02	-	63	12	375
1995	419	177	433	15	150	43	81	06	60	25	64	19	10	03	1217	288	1505
1996	446	142	321	33	129	53	83	13	54	26	55	14	04	04	1092	285	1377
1997	520	227	641	65	168	92	118	19	91	52	46	44	15	08	1599	507	2106
1998	360	271	429	94	133	140	99	36	58	69	54	22	17	16	1150	648	1798
1999	362	203	323	68	144	118	79	19	86	57	51	23	07	05	1052	493	1545
2000	473	318	228	79	234	179	100	27	105	78	62	45	35	17	1237	743	1980
2001	171	117	119	28	74	58	45	12	41	27	31	22	08	06	489	270	759
2002	08	04	01	04	04	01	02	-	02	02	-	01	-	01	17	13	30
	4763	**1724**	**4098**	**436**	**1755**	**766**	**1320**	**159**	**904**	**387**	**807**	**230**	**234**	**64**	**13881**	**3766**	**17647**
மொத்தம்	6487		4534		2521		1479		1291		1037		298		17647		

2002ஆம் ஆண்டு ஆவணி மாதம் 31ஆம் நாள் வரை தமிழீழ விடுதலைப் போரில் வீரச்சாவடைந்த மாவீரர் விரிப்பு

1982	01	-	01
1983	05	-	05
1984	36	-	36
1985	123	-	123
1986	258	-	258
1987	437	14	451
1988	352	11	363
1989	371	01	372
1990	889	72	961
1991	1405	208	1613
1992	713	75	788
1993	801	124	925
1994	363	12	375
1995	1217	288	1505
1996	1092	285	1377
1997	1599	507	2106
1998	1150	648	1798
1999	1052	493	1545
2000	1237	743	1980
2001	489	270	759
2002	17	13	30
ஈரோஸ்	264	02	266
தனிக்குழு	10	-	10
மொத்தம்	13881	3766	17647

31-08-2002 வரை வீரச்சாவடைந்த கரும்புலிகள், எல்லைப்படை வீரர்களின் விரிப்பு.

	60	18	78
	117	46	163
	177	64	241
	275	05	280



முக்கிய முகாம் தகர்ப்புக்கள், படை நடவடிக்கைகளில் வீரச்சாவடைந்த மாவீரர்களின் விரிப்பு

ஆ.க.வெ.சமர்	604
மணலாறு	233
தவளை நடவடிக்கை	460
கொக்குத்தொடுவாய்	175
இடிமுழக்கம்	181
சூரியக்கதிர் (ரிவிரச)	438
ஓயாத அலைகள்-01	315
சத்ஜெய-02 படைநடவடிக்கையும் அதன் மீதான எதிர்த்தாக்குதல்களும்	100
சத்ஜெய-03 படைநடவடிக்கையும் அதன் மீதான எதிர்த்தாக்குதல்களும்	133
பரந்தன் ஆனையிறவு	193
வவுணதீவு	103
கிளி-பரந்தன் படைத்தளம் மீதான ஊடுருவித் தாக்குதல்	300
ஓயாத அலைகள்-02	403
ஜெயசிக்குறு படைநடவடிக்கையும் அதன் மீதான எதிர்த்தாக்குதல்களும்	2146
ஓயாத அலைகள்-03	1336
ஓயாத அலைகள்-04	181
தீச்சுவாலை முறியடிப்புச் சமர் (அக்கினிகில)	141

	தரைக் கரும்புலிகள்			கடற் கரும்புலிகள்			மொத்தம்
	ஆண்	பெண்	மொத்தம்	ஆண்	பெண்	மொத்தம்	
யாழ்ப்பாணம்	19	12	31	56	38	94	125
மட்டு அம்பாறை	24	02	26	21	-	21	47
வன்னி	06	02	08	12	02	14	22
திருமலை	04	-	04	10	02	12	16
முல்லைத்தீவு	-	01	01	07	02	09	10
மன்னார்	04	01	05	09	01	10	15
வெளி	03	-	03	02	01	03	06
மொத்தம்	60	18	78	117	46	163	241

நேற்றுவரை நீங்கள் நேரிருந்தீர்
கண்களிலே...
பூத்ததுபோல் பூத்துப் புன்னகைத்தீர்
எங்களுடன்
பேசிக் களித்தீர் போய்விட்டீர்
தாயகத்தில்
வீசிவரும் காற்றில் விரித்த சிறகெடுத்துத்
தூரப் பறந்துவிட்ட துணிவுப் பறவைகளே!
ஈரவிழியிங்கு எமக்கிங்கு காயவில்லை.
ஊரறியோம்
உங்கள் உறவறியோம்
தந்தையிட்ட
பேரறியோம் ஆனாலும்
புகழறிந்து நிற்கின்றோம்
நெஞ்சினிலே உங்கள் நினைவுக்கு
மாலையிட்டு
நஞ்சணிந்தோம்
நீங்கள் நடந்தவழி நடக்கின்றோம்.
தம்பியென்றும்
அண்ணன் தங்கையென்றும்
எங்களுக்கோர்
வம்சவழி தோன்ற வாழ்ந்தோமே
கல்லறைக்குள் நீங்கள் கண்மூடித்
தூங்குவதாய்
சொல்லுகிறார்
உங்கள் தேகம் தூங்காதே
மொட்டவிழும் பூவினிலே முகம் தெரியும்
கல்லறைக்குக்
கிட்டவர உங்கள் கண்தெரியும்
வீசுகின்ற
காற்றினிலும் மூச்சுக் கலந்து
எம்மை உயிர்ப்பிக்கும்
கூற்றெனவே வரும் பகையைக்
குடிப்போம்
வென்றிடுவோம்.

– புதுவை இரத்தினதுரை

Liberation Tigers Of
TAMIL EELAM

வெளியீடு : அனைத்துலகச் செயலகம் - தமிழீழ விடுதலைப் புலிகள்